Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

E2 AUG 2004

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி-18 | 02-08-2004 | திங்கட்கிழமை | ஓசை -166




# இராணுவப் புலனாய்வாளர்கள் இருவர் புலிகளால் ஆயுதங்களுடன் கைது!

## துணை நின்ற மற்றுமொருவரும் கைது

(மட்டக்களப்பு)

**சிறிலங்கா இராணுவப் புலனாய்வாளர்கள் இருவரும், இவர்களுக்குத் துணையாகச் செயற்பட்டு வந்த மற்றுமொரு நபரும், ஆயுதங்களுடன் கரடியனாறு - வேப்பவெட்டுவான் பகுதியில் வைத்து தமிழீழ விடுதலைப்புலிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.**




பெரிய புல்லுமலை-கரடியனாற்றைச் சேர்ந்த ஆறுமுகம் இரவிச்சந்திரன் (வயது 30), சின்னத்தம்பி என்று அழைக்கப்படும் செல்லத்துரை சந்திரசேகரன்(வயது 22) ஆகிய இரு இராணுவப் புலனாய்வாளர்களுமே விடுதலைப்புலிகளினால் கைது செய்யப்பட்டுள்ளவர்களாவர்.

இவர்களிடமிருந்து ஏ.கே 47 ரகத்துப்பாக்கிகள் இரண்டு மற்றும் கையடக்கத் தொலைபேசி ஒன்று மற்றும் மகஸீன்கள்,ரவைகள் என்பனவும் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை இவர்களுடன் தொடர்பு வைத்திருந்தமை மற்றும் அனுமதி இன்றி ஆயுதம் வைத்திருந்தமை தொடர்பாக பெரிய புல்லுமலை கரடியனாற்றைச் சேர்ந்த (12ஆம் பக்கம் பார்க்க

## முரண்பாடுகளைப் போக்க சனாதிபதி ஜே.வி.பி சந்திப்பு

(கொழும்பு)

விவசாயத்துறை அமைச்சின் சில பொறுப்புகளை சனாதிபதி ஆற்றுப்படுக்கை மற்றும் ஏனைய அமைச்சு ஒன்றுக்கு மாற்றியமையை அடுத்து எழுந்துள்ள நிலைமை குறித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை சந்தித்து பேசவுள்ளன. சிறிலங்கா சுதந்திர கட்சியின் செயலர் மைத்திரிபால சிரிசேன தலைமையிலான குழுவும், மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலர் விமல் வீரவன்ச தலைமையிலான குழுவினரும் இந்தச்சந்திப்பில் பங்கேற்கவுள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணியினரின் வசம் உள்ள விவசாய அமைச்சின் கீழ் வரும் ஆற்று நீர்ப்பங்கீடு உட்பட்ட சில பொறுப்புக்களை சனாதிபதி எவ்வித கலந்தாலோசனையும் செய்யாமல், மைத்திரிபால சிறிசேனவின் ஆற்றுப்படுக்கை துறை அமைச்சுக்கு மாற்றியமையை அடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அங்கத்துவக் கட்சிகளான சிறிலங்கா சுதந்திர கட்சிக்கும்,மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் முரண்பாடுகள் தோன்றியுள்ளமையை அடுத்தே இந்தச் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

## போராளிகளை அதிரடிப்படையினர் கைது செய்தது புரிந்துணர்வை அர்த்தமற்றதாக்கியுள்ளது

### -அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்

அக்கரைப்பற்றில் விசேட அதிரடிப் படையினர் தமது உறுப்பினர்களைக் கைது செய்திருப்பது படைத்தரப்பினருக்கும், தமக்கும் இடையில் இடம் பெற்றுவரும் சந்திப்புக்களையும் அதனூடாக ஏற்பட்டிருக்கும் புரிந்துணர்வுகளையும் அர்த்த மற்றதாக்கி உள்ளதாக விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் தமது உறுப்பினர்கள் எனத் தெரிவித்துள்ள குயிலின்பன் இவர்களில் 3 பேர் விடுமுறையில் சென்றவர்கள் எனவும் ஏனைய 5 பேரும் மட்டக்களப்பில் அரசியல் வேலைத்திட்டத்தில் இணைந்திருந்ததாகவும் குறிப்பிட்டார். விடுமுறையில் சென்ற இருவரின் உடைகள் வைக்கப்பட்ட பொதியில் துப்பாக்கி ரவைகள் இருந்ததாகவும் ஆனால் அவை தவறுதலாக பொதியில் இருந்தனவா? அல்லது விசேட அதிரடிப்படையினர் திட்டமிட்டு பொதியில் அவற்றை போட்டார்களா? என தாம் ஆராய்வதாகவும் தெரிவித்தார். விடுமுறையில் செல்லும் தமது

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானப் பேச்சிற்கான முன்னெடுப்புக் குறித்து ஐ.தே.க.வுடன் உடன்பாட்டிற்கு வர சனாதிபதி முடிவு

### அரசாங்க உயர் பீடம் அறிவிப்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்கான முன்னெடுப்புச் சம்பந்தமாக ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒரு உடன்பாட்டிற்கு வர சனாதிபதி தீர்மானம் எடுத்திருப்பதாக அரச உயர்பீடம் அறிவித்துள்ளது.

மீண்டும் சனாதிபதி, மலிக் சமரவிக்கிரம, மனோ நித்தவெல்ல ஆகியோரை பேச்சு வார்த்தைகள் நடத்திவதற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிப்பதென்றால் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வது மிக அவசியம் என சிரேஷ்ட அமைச்சர்கள் பலர் தெரிவித்துள்ளனர். நாட்டில் முக்கியமான பிரச்சினைகளை தீர்க்கும் பொழுது எதிர்க்கட்சியினரின் ஆலோசனை கட்டாயமாக பெறப்பட வேண்டும் என அமைச்சர்கள் சுட்டிக் காட்டினர். அமைச்சர் ராஜிதசேனாரத்ன சமீபத்தில் வெளியிட்ட கருத்துக்களை அரசாங்கம் வரவேற்றுள்ளது. (32)

### பிக்குமீது அசிட் வீசிய

## சந்தேக நபரான பிக்குவும் நேற்று மரணமானார்!

(கொழும்பு)

அண்மையில் களனிப் பகுதியிலுள்ள அபினாராமய விகாரையின் பெளத்த பிக்கு ஒருவரை அசிட்வீசி கொலை செய்ததாகக் கூறப்படும் மற்றும் ஒரு பெளத்த பிக்கு நேற்று மரணமானார். குறிப்பிட்ட பெளத்த பிக்கு அசிட் வீச்சு சம்பவத்தை அடுத்து தலைமறைவாகியிருந்தார். பின்னர் காலிப் பகுதியில் புகையிரதப் பாதையில் விழுந்த நிலையில் கடும் காயங்களுடன் காலி கராப்பிட்டிய வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்ட வேளையில் நேற்று மரணமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.(32)

## வல்வைப்படுகொலையின் 15 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று அனுஷ்டிப்பு

### -நினைவுத்தூபியும் இன்று திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

1989 ஆம் ஆண்டில் இந்திய அமைதிப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் 63 பேரினதும் 15 ஆம் ஆண்டு நினைவு நாள் இன்று வல்வெட்டித்துறையில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

சமாதானத் தூதர்கள் என்ற பெயரில் வந்த இந்திய அமைதிப்படையினரால் இதேநாளில் நடாத்தப்பட்ட மனித வேட்டையில் வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் 63 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

வியட்நாம் நாட்டில் அமெரிக்க இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட "மைலாய்ப் படுகொலை"க்கு ஈடாக இலங்கையில் இந்தியப் படையினர் மேற்கொண்ட இப்படுகொலை "வல்வைப் படுகொலை" என அழைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி 63 பொதுமக்களும் அடக்கஞ் செய்யப்பட்ட தீருவில் பகுதியில் இவ் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெறவுள்ளது.

இந்திய அமைதிப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் 63 பேரினதும் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டுள்ள நினைவுத்தூபி இந்நிகழ்வில் திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

வல்வை விளையாட்டுக்கழகத் தலைவர் எஸ்.தங்கவேல் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நினைவு தின நிகழ்வுக்கான (12ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற ம.உ.செயலகத்தின் 2ஆவது கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் இரண்டாவது கூட்டம் நேற்று (1ஆம் திகதி) காலை 10.00 மணிக்கு நடைபெற்றது.

நிகழ்ச்சி நிரலின் பிரதான விடயமாக செயலகத்தின் திருத்தங்கள் செய்யவேண்டிய பத்திரத்தின் நகல் குறித்து கலந்துரையாடப்பட்டது.

வண-பிதா கருணாரட்ணம் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலக செயலாளர் புலித்தேவன், திருகோணமலை வழக்கறிஞர் சிவபாலன், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி டாக்டர் சிவபாலன், யாழ்.பல்கலைக்கழக நூலகர் அருளானந்தம், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரன், சந்திரநேரு (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்), (12ஆம் பக்கம் பார்க்க)

# முறைகேடுகள், புறக்கணிப்புக்களைக் கண்டித்து வேலையற்ற பட்டதாரிகள் இன்று மறியல் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி நியமனங்களில் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் புறக்கணிப்புக்களைக் கண்டித்து யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் யாழ்.செயலகம் முன்பாக அடையாள மறியல் போராட்டமொன்றை இன்று காலை நடத்தவுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி பட்டதாரிகள் நியமனங்களில் நிராகரிக்கப்பட்டுள்ளமை, யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் இடம்பெற்ற நியமனப் பட்டியலில் காணப்படும் குறைபாடுகள் என்பனவற்றை முன்நிறுத்தியே இம்மறியல் போராட்டம் இடம் பெறவுள்ளது.

காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரையான இருமணி நேரமே இம்மறியல் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதனிடையே யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் மற்றும் யாழ்.மாவட்ட உயர் தேசியக்கணக்கியல் வர்த்தகப் பட்டதாரிகள் சங்கம் என்பவை மேற்படி குற்றச்சாட்டுக்களை முன்வைத்து யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் புகார்களைச் செய்துள்ளனர்.

## நேர்முகப் பரீட்சை

வவுனியா மாவட்டத்தில் சுகாதார திணைக்களத்தில் நிலவும் சுகாதாரத் தொழிலாளிகளின் வெற்றிடங்களை நிரப்பும் நோக்குடன் வவுனியா மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான நேர்முகப் பரீட்சை வரும் ஆறாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கனகராயன் குளத்தில் நடைபெற உள்ளது.

நேர்முகத் தேர்வுக்கு வரும் போது க.பொ.த. (சா/த) சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடத்தை உறுதி செய்யும் சான்றிதழ், வேறு விசேட தகமைகள் இருப்பின் அதற்கான சான்றிதழ் என்பவற்றுடன் வருகைதருமாறு வவுனியா மாவட்ட மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக் கொள்கின்றார்.

நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (20)

# குளவி கொட்டியதால் வைத்தியசாலையில் அனுமதி

(அலுவலக செய்தியாளர்)

குளவி கொட்டியதன் விளைவாக மூவர் சிகிச்சையின் பொருட்டு கிளி.மாவட்ட வைத்திசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.மேற்படி சம்பவம் நேற்றையதினம் இராமநாதபுரம் நாவலடிப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

"குளவிக் கூட்டிற்கு கல் எறிந்ததன் விளைவாகவே கூட்டிலிருந்து குளவிகள் கலைந்து வீதியால் பயணித்த நபர்களை கொட்டியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.இராமநாதபுரத்தைச் சேர்ந்த ம.சபின்ஸ் (வயது 25) க.ஜெனதன் (வயது 09) ம. லதீஸ் (வயது 12) ஆகியோரே குளவி கொட்டியதன் காரணமாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருபவர்களாவர்.மேலும் பலர் குளவியினால் கொட்டப்பட்டு வட்டக்கச்சி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (சோ.கு)

# புதிய பேருந்து சேவை மக்கள் மகிழ்வோடு வரவேற்பு

(மல்லாவி)

தேராங்கண்டல் ஐயங்குளம் த்துவெட்டுவான் ஊடாக பயணிள் பேருந்து சேவை நேற்றுக் காலை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறித்து மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். ஐயங்குளம் சந்தியில் இப் பேருந்து சேவையை வரவேற்று குத்து விளக்கு ஏற்றி பேருந்துக்குமலர்மாலைகள் அணிவித்து மக்கள் மிகவும் ஆரவாரத்தோடும் மகிழ்வோடும் இப்பேருந்தை வழி அனுப்பிவைத்தனர். (24)

# தங்கும் விடுதி இன்மையால் ஆசிரியர்கள் நெருக்கடியில்

(முள்ளியவளை)

நெடுங்கேணி மதியாமடு விவேகானந்தா வித்தியாலயத்தில் ஆசிரியர் தங்கும் விடுதிஇன்றி ஆசிரியர்கள் கஷ்டத்திற்குள்ளாகி வருகின்றனர்.

மேற்படி பாடசாலையில் கற்பித்தலில் ஈடுபட்டுள்ள வெளிமாவட்ட ஆசிரியர்கள் தங்கி நின்று காலக்கிரமத்தில் பாடசாலைக்குச் சமுகமளிக்க முடியாமலும், தமது கற்பித்தலைச் சீரான முறையில் தொடர முடியாமலும் கஷ்ரப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

மேற்படி பாடசாலையில் ஆசிரியர் விடுதி அமைக்கப்படும் போது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் மேலும் வலுவடையும் என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஆ)

# நிர்வாகசபை தெரிவு

(உடையார்கட்டு)

விசுவமடு- மாணிக்கபுரம் கிராமத்திற்கான புதிய தேசிய எழுச்சிப் பேரவைதெரிவிற்கான ஒன்று கூடல் விசுவமடு கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலர் டாக்டர் பத்மநாதன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை விசுவமடு பாரதி வித்தியாலயத்தில் நடைபெற்றது.புதிய தேசிய எழுச்சிப் பேரவையில் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவாகினர்.

# வவுனியா வைத்தியசாலையில் பொலித்தீன் பாவனைக்குத் தடை

வவுனியா வைத்தியசாலையில் பொலித்தீன் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

வெளிநோயாளர் பிரிவிலோ, தங்கி நின்று சிகிச்சை பெறும் இடத்திலோ பொலித்தீன் பாவித்தல் தடை செய்யப்பட்டுள்ளதுடன் பொலித்தீனுடன் எந்த உணவுப் பொருட்களையும் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முடியாத வகையில் அங்குள்ள பணியாளர்கள் கண்காணித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (20)

# சின்னப் பூவரசங்குள வீதி மோசமான நிலையில்

(முள்ளியவளை)

நெடுங்கேணி - மதியாமடு சின்னப் பூவரசங்குள வீதி படுமோசமான குன்றும் குழியுமாகவுள்ளதால் அவ் வீதியால் செல்வோர் பெரும் கஷ்ரங்களை அனுபவிக்கின்றனர்.

மேற்படி வீதியானது மதகுகள் அற்ற நிலையில் உள்ளதாலும் அப்பகுதி குளம் வான் பாய்கின்ற போது அவ் வீதியை குறுக்கறுத்து தண்ணீர் ஓடுவது வழக்கம். அக் காலங்களில் அவ் வீதியால் மக்கள் போக்குவரத்துத் துண்டிக்கப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ஆ)



கனடா மணிற்ரோபா பல்கலைக்கழக விரிவுரையாளர் டாக்டர் சிறிகலா கடந்த வியாழக்கிழமை அன்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் புற்று நோய் தொடர்பான கருத்தரங்கு ஒன்றினை நடாத்தினார். அவர் வைத்தியசாலை டாக்டர்களுக்கும் தாதிமார்களுக்கும் விளக்கம் அழிப்பதை படத்தில் காணலாம். படம்(சோதி,வரன்)

# தண்ணீரூற்று மேற்கு கி.அ.சங்க புதிய நிர்வாகிகள் தெரிவு

(முள்ளியவளை)

தண்ணீரூற்று மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் 29.07.2004 பி.ப 4.00 மணிக்கு அப்பகுதி பொதுமண்டபத்தில் சங்கத் தலைவர் சி.சிவசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி கூட்டத்தில் சமகால அரசியல் நிலை தொடர்பாகவும், மக்களின் விழிப்புணர்வு மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பாகவும், தண்ணீரூற்று வலய அரசியல் துறைப் பொறுப்பாளர் தென்றல் மாறன், கரைதுரைப்பற்று கிராம அபிவிருத்திச் சங்க உத்தியோகத்தர், அப்பகுதி கிராம அலுவலர் ஆகியோர் கருத்துரை வழங்கியதையடுத்து புதிய நிர்வாகத் தெரிவு இடம் பெற்றுத் தலைவராக ச.ஜெயபாலன்,செயலாளராக செ.உத்தமபுத்திரன்,பொருளாளராக து.கணேசமூர்த்தி ஆகியோருடன் 09 நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மேற்படிகூட்டத்தில் தேசிய எழுச்சிப் பேரவையினர், அப்பகுதிப் பொதுமக்கள் எனபெருமளவானோர் கலந்து கொண்டனர்.(ஆ)

# சிறிலங்கா இராணுவத்தில் அதிகாரிகள் பலருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

சிறிலங்காவின் இராணுவ உயர் அதிகாரிகள் பலருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகத்தினால் இவ்வாரம் முதல் இந்த மாற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இராணுவத் தளபதி லெப்ரினன்ட் ஜெனரல் சாந்த கொட்டே கொடவின் சிபார்சுகளிற்கு அமைய பாதுகாப்பு அமைச்சு இந்த மாற்றங்களுக்கு அனுமதி வழங்கியிருக்கின்றது.

திருகோணமலை இராணுவக் கட்டளைத்தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டுகிறார் இவர் இருந்த இடத்திற்கு பாரமிகு லதுங்க நியமிக்கப்படுள்ளார். அத்துடன் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருக்கும் 52ஆவது டிவிசன் படையணியின் தலைமை அதிகாரியாக இராணுவ தலைமையகத்தில் நடவடிக்கை பிரிவு அதிகாரியான பிரிகேடியர் நிமல் ஜெயசூரிய எதிர்வரும் 22ஆம்திகதி முதல் நியமிக்கப்படுகிறார்.

இதைவிட இராணுவ தலைமையக சம்பள பிரிவு அதிகாரியான பிரிகேடியர் ரணவீர யாழ்ப்பாண தாக்குதல் பிரிவின் பொறுப்பதிகாரியாக பொறுப்பேற்கிறார் இதைவிட இராணுவ தலைமையகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் அலுவலக சில்வா யாழ். மாவட்ட கூட்டுப் படை நடவடிக்கை பொறுப்பாளர் அதிகாரியாக பொறுப்பேற்கிறார்.

இதேவேளை யாழ். மாவடடக் கட்டளைத் தளபதியாக இருந்த ஜெனரல் சுனில் சந்திரபால இலங்கை இராணுவத் தொண்டர் படையணியின் கட்டளைத் தளபதியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதேவேளை இராணுவ பிரதம அதிகாரியான ஜெனரல் சூல சேனவிரத்ன இம்மாத இறுதியுடன் சேவை ஓய்வு பெறவுள்ளதையடுத்து அவரின் இடத்திற்கு பதில் பிரதம இராணுவ அதிகாரியான ஜெனரல் சரத் பொன் சேகர நியமிக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத்தலைமையகத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (33)

# சுதந்திரபுரம் கிராம தே. எ. பேரவை சந்திப்பு

சுதந்திரபுரம் கிராமத்தின் தேசிய எழுச்சிப் பேரவைக்கான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இச் சந்திப்பு சுதந்திரபுரம் கிராம தேசிய எழுச்சி பேரவைசெயலாளர் தலைமையில் ஆரம்பமானது. இந் நிகழ்வில் கருத்துரைகளை அக் கிராம சேவையாளர் சுந்தரலிங்கம் அவர்களும், அப்பகுதிக் கிராம பொறுப்பாளரும் நிகழ்த்தினர். இந் நிகழ்வில் சிறப்புரையினை முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேர வைப்பொறுப்பாளர் மயூரன் நிகழ்த் தினார்.

இந் நிகழ்வில் சுதந்திரபுரம் கிராமத்திற்குட்பட்ட அனைத்து பொது அமைப்புகளும் கலந்து கொண்டு சிறப்பித்தன. (08)


## தேடுகிறார்

மாறாங் கோவிலடி அல்வாயை சேர்ந்த நடராஜா - யோகேஸ்வரனை (பொன்குஞ்சு, குஞ்சு) தாயார் சுகவீனமுற்றுள்ள காரணத்தால் விக்னேஸ்வரன் (அப்பன்) விக்னா இன்டஸ்ரீஸ் உடுப்பிட்டியை சேர்ந்தவர் தேடுகிறார். உடன் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:-
கா.விக்னேஸ்வரன்
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.

தொடர்புக்கு 0777737235

(சீ-10050)

## கணினிப் பயிற்சி நிலையம் மீள ஆரம்பம்

அன்புடையீர்:-

தமிழீழ மாணவர் அமைப்பினால் நடாத்தப்பட்டு வந்த புதுக்குடியிருப்பு கணினிப் பயிற்சி நிலையம் புதுப் பொலிவுடன் மீண்டும் 08-08-2004 அன்று காலை 10.00 மணிக்கு மீள ஆரம்பிக்க இருக்கிறது. அத்துடன் முன்னர் பயிற்சியை முடித்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும், புதிய மாணவர்களை இணைப்பதற்கான நேர்முகப் பரீட்சையும் இதே தினத்தில் நடைபெறவுள்ளது.

முன்பு பயிற்சியை முடித்து சான்றிதழ் பெற வேண்டியவர்களும், புதிதாக இணைய விரும்புவோரும் இந் நிகழ்வுக்கு சமுகம் தரும்படியும், கணினிப் பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்கும் படியும் அன்புடன் அழைக்கிறோம்.

இவ்வண்ணம்
இணைப்பாளர்
கணினி பயிற்சி நிலையங்கள்
தமிழீழ மாணவர் அமைப்பு.

(4648)

# கைதிகளை விடுவிக்க துருக்கி கம்பனி ஈராக்கில் வர்த்தகத்தை நிறுத்த முடிவு

**ஈராக்கில் தனது வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்துவதற்குத் தயாரென ஈராக்கில் பணயம் வைக்கப்பட்டுள்ள இரண்டு பேரையும் வேலைக்கமர்த்திய துருக்கி நிறுவனம் அறிவித்துள்ளது.**

ஈராக்கில் பணயம் வைக்கப் பட்டுள்ள இரண்டு துருக்கி நாட்டுச் சாரதிகளைக் கடத்தியவர்கள் சம்பந்தப்பட்ட இருவரையும் விடுதலை செய்வதாயின் இவர்களை வேலைக்கமர்த்திய நிறுவனம் தொடர்ந்தும் ஈராக்கில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது எனத் தெரிவித்ததுடன், தவறினால் 48 மணி நேரத்தில் சிரச்சேதம் செய்யப்படுவார்கள் எனவும் அது தெரிவித்திருக்கிறது.

இதனை அடுத்தே அந்த நிறுவனம் துருக்கிப் பணயக்கைதிகளைக் காப்பாற்றுவதற்காக தனது வர்த்தக நடவடிக்கைகளை நிறுத்துவதற்குத் தயாரென அறிவித்துள்ளது.



பலூஜாவில் அமெரிக்கத் துருப்பினருக்கும் ஈராக்கிய தீவிரவாதிகளுக்குமிடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சமரில் தாக்கப்பட்ட வீட்டிலிருந்து கிளம்பும் புகைமண்டலம் எழுகின்றது. (சம்பவத்தில் 3ஈராக்கியர்கள் பலி யானதுடன் 10 பேர்காயமடைந்தனர்.)

### -உலக வர்த்தகப் பேச்சுக்களை-

# காப்பதற்கான உடன்பாடு குறித்து அபி. அடைந்து வரும் நாடுகள் அதிருப்தி!

உலக வர்த்தகப் பேச்சு வார்த்தைகளை காப்பாற்றுவதற்கு செய்யப்பட்ட ஒப்பந்தம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளை திருப்திப்படுத்தவில்லையென சீனா கூறியுள்ளது.

இதேவேளை இந்தஒப்பந்தத்தை ஐரோப்பாவின் பொருளாதார வல்லரசுகளான ஜேர்மன், பிரிட்டன்,பிரான்ஸ் ஆகிய நாடுகள் வரவேற்றுள்ளன.

இவ் ஒப்பந்தம் குறித்து ஜேர்மன் பொருளாதார அமைச்சர் பிலமின் தெரிவிக்கையில் நூற்றி நாற்பத்தேழு நாடுகள் அங்கம் வகிக்கும் உலக வர்த்தக நிறுவனம் சர்வதேச வர்த்தகப் பேச்சுவார்த்தைகளில் சீனாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

இதே வேளை பிரான்சின் விவசாய அமைச்சர் மற்றும் பிரிட்டனின் வர்த்தக அமைச்சர் ஆகியோர் இந்த ஒப்பந்தம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல உதவும் எனவும், குறிப்பாக வளர்முக நாடுகள் நன்மை அடையும் எனவும் தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவிலுள்ள இதாகோ அரசின் புகழ்பெற்ற கல்விமான்களின் கல்லறையில் அமெரிக்கக்கொடி பறக்கவிட்டிருப்பதை அவதானிக்கும் மக்கள்.

# ஐவரிக்கோஸ்ட் அரசு-கிளர்ச்சியாளர் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்து

ஐவரிக்கோஸ்ட்அரசும் கிளர்ச்சிவாதிகளும் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளனர்.

கானாவின் தலைநகரில் இரண்டு நாட்களாக இடம் பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து அரசியல் சீர்திருத்தம் மற்றும் கிளர்ச்சிவாதிகளை நிராயுத பாணிகளாக்குவது என்பது குறித்து இணக்கம் காணப்பட்டுள்ளது.

இவ் ஒப்பந்தத்திற்கு அமைய மேற்காபிரிக்க நாட்டின் வடபகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள கிளர்ச்சியாளர்களின் ஆயுதங்கள் ஒக்டோபர் மாதம் நடுப்பகுதியில் களையப்படும் என்பதும் இதற்கு முன்னர் அரசியல் சீர்திருத்த நடவடிக்கைகள் அமுல் செய்யப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஐவரிக்கோஸ்டில் 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் அரசை கவிழ்க்க மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சியைத் தொடர்ந்து கிளர்ச்சி யாளர்களுக்கும் அரசிற்கும் இடையே முறுகல் ஏற்பட்டமை. குறிப்பிடத்தக்கது. இதே வேளை இரு தரப்பினரும் அதிகாரத்தை மீண்டும் பகிர்ந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதென ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் கருத்து தெரிவித்துள்ளார்.

# எதிர்க்கட்சியின் பிரச்சாரம் இனிமையாக இருப்பினும் செயல்வடிவம் கொடுப்பது மிகக் கடினமானது

### அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்

எதிர்க்கட்சியினரின் தேர்தல் பிரச்சாரம் கேட்பதற்கு மிக இனிமையாக இருந்தாலும் அவற்றிற்கு செயல்வடிவம் கொடுப்பது மிகவும் கடினமானதென அமெரிக்க சனாதிபதி ஜோாஜ் டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ள நிலையில் நேற்றுமுன்தினம் கால்பந்தாட்ட மைதானம் ஒன்றில் தோன்றி புஷ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# வாயுக்குழாய் வெடிப்பில் பெல்ஜியத்தில் 14பேர் பலி

(புருசெல்ஸ்)

பெல்ஜியத்தில் இடம்பெற்ற வாயுக்குழாய் வெடிப்பொன்றில் பதினான்கு பேர் உயிரிழந்துள்ளதுடன் இருநூறிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். நேற்று முன்தினம் பெல்ஜியத்தின் தென்பகுதியில் உள்ள கைத்தொழில் வலயம் ஒன்றில் வாயு விநியோகக் குழாயில் ஏற்பட்ட பாரிய வெடிப்பினாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

பெல்ஜியத்தின் சுகாதார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தகவல் தருகையில் 14 பேர் உயிரிழந்தமை ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளதாகவும் காயமடைந்த இருநூறு பேரில் நூறு பேர் பலத்த எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# சுதந்திரத்துக்கான முயற்சியில் ஈடுபட்டால் சீன இராணுவம் அதனை முறியடிக்கும்

### தாய்வானுக்கு எச்சரிக்கை

தாய்வான் சுதந்திரம் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டால் சீனா இராணுவத்தினர் அதனை முறியடிப்பதற்கான ஆற்றலைப் பெற்றிருக்கிறார்களென சீனாவின் பாதுகாப்பமைச்சர் நேற்று தெரிவித்துள்ளார்.

தாய்வானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு எதிராக சனாதிபதி புஷ்சிற்கு சீனா சனாதிபதி எச்சரித்துள்ளதைத் தொடர்ந்து பாதுகாப்பமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆறு பாக். இராணுவத்தினர் தாக்குதலில் பலி!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தென்மேற்கு மாகாணத்தில் பலுகிஸ்தான் நகரில் அடையாளம் தெரியாத துப்பாக்கி நபர்கள் இராணுவ வாகனம் ஒன்றைத் தாக்கியதில் ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இரண்டுபேர் காயமடைந்துள்ளனர் என்று பாகிஸ்தான் இராணுவம் நேற்று முன்தினம் கூறியுள்ளது.




கைது செய்யப்பட்ட அல் ஹைதா இயக்க உறுப்பினர் அபு முசாப் அல்-சகாவி பற்றிய முக்கிய தகவலைத் தருவோரிற்கு சன்மானம் வழங்கப்படும் என்ற விளம்பரத்தைக் கொண்ட சுலோகத்தை ஒரு கிளர்ச்சிக்காரர் அமைதியற்ற பலூஜா நகரில் ஏந்தி நிற்கின்றார்.

# வங்கக்கடல் கரையோர ஆசிய நாடுகளில் பயங்கரவாதத்தை முறியடிக்க கூட்டுக்குழு

### 'வின்செட்' உச்சிமாநாட்டில் முடிவு

வங்கக்கடல் கரையோர ஆசிய நாடுகளின் வின்செட் குழு பயங்கரவர்தத்தை முறியடிக்கக் கூட்டுஅலுவல் குழுவை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் புதிய குழுவின் முதல் கூட்டம் இந்தாண்டின் பிற்பகுதியில் புதுடில்லியில் நடைபெறவுள்ளது.

பாங்கொங்கில் முதலாவது வின்செட் உச்சி மாநாட்டின் முடிவில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை பயங்கரவாதக் குழுக்கள் வின்செட் நாடுகளின் பிரதேசங்களைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப் போவதில்லை என்றும், பொருளாதார ஒத்துழைப்புக்கு ஏற்றம் தருவது என்றும், அதற்காகத் தடையற்ற பொருளாதாரப் பேச்சுவார்த்தைகளை நடத்துவது என்றும், இந்த உறுப்பு நாடுகள் உறுதி பூண்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.



இஸ்லாமிய செல்வாக்குள்ள தெற்கு பற்றானி மாகாணத்தில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள தாய்லாந்து இராணுவ வீரர்கள் (இடது) துறவிகளிற்கு பாதுகாப்பு வழங்குகின்றனர்.

-உரிய முறையிலான தபால் சேவை இல்லை-

# பல வாய்ப்புகளை இழந்து வரும் விசுவமடு றெட்டபானா கிராம மக்கள்

வள்ளுவர்புரம், மாணிக்கபுரம் தேராவில் என மூன்று கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்ட றெட்பானா கிராம மக்கள் தபால் சேவை வசதிகள் இன்றிப் பல வருடங்களாகப் பல பிரச்சினைகளை அனுபவித்து வருகின்றார்கள்.

றெட்பானா நிறுவனத்தின் அனுசரணையின் கீழ் வாழ்ந்து வந்த மாணிக்கபுரம், வள்ளுவர்புரம், தேராவில் மக்கள் தற்போது அந் நிறுவனத்தின் செயற்பாடுகள் ஏதும் இன்றி 20 வருடங்களுக்கு மேல் பின் தங்கிய நிலையில் இருந்து வருகின்றனர்.

இக்கிராம மக்கள் 1977இல் ஏற்பட்ட பேரினவாதிகளின் இன்னல்களுக்கு ஆளாக்கப்பட்டு தமது சொத்துக்களையும், சுகங்களையும் இழந்து பல மாவட்டங்களிலும் இருந்து இடம் பெயர்ந்து இங்கு வந்து அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட பெரும் காடுகளை அழித்து தங்கள் வாழ்விடங்களை அமைத்துக்கொண்டனர்.

இக்கிராம மக்கள் தகவல் பரிமாற்றங்களில் ஒன்றான கடிதம், தந்தி என்பனவற்றைப் பெற்றுக் கொள்ள வேண்டுமெனின் மிகவும் சிரமத்தின் மத்தியில் தான் பெற்றுக் கொள்ள வேண்டும். 600 இற்கும் மேற்பட்ட நிரந்தரக்குடும்பங்களும், தற்போது இடப் பெயர்வால் குடியேறிய 200 இற்கு மேற்பட்ட குடும்பங்களும் வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், தேராவில் போன்ற கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர்.

இக்கிராமங்களில் படித்த இளைஞர்கள், யுவதிகள் வேலை வாய்ப்பிற்காக விண்ணப்பித்து விட்டு அந்த வேலைக்கான தேர்வு எப்போது வரும் என காத்திருப்பது வழைமையானதுதான். ஆனால் இவர்களுக்கான தேர்வுக் கடிதம் அனுப்பப்பட்டாலும் குறித்த நாள், குறித்த நேரத்தில் இவர்கள் கையில் கிடைப்பதில்லை. இதனால் இவர்களுக்குக் கிடைக்கும் வேலை வாய்ப்பு கிடைக்காமல் போகின்றது. உயர்தர மாணவர்களுக்குக் கூட தேர்வுக்கான அனுமதிக்கடிதம் உரிய காலத்தில் இவர்கள் கையில் கிடைப்பதில்லை.

இக்கிராம மக்கள் தபாலகம் செல்ல வேண்டுமாக இருந்தால் மூன்று மைல்களுக்கு அப்பால் உள்ள விசுவமடு தபாலகத்திற்கோ அல்லது உடையார்கட்டு தபாலகத்திற்கோ செல்ல வேண்டும்.

இவ்வாறு இருக்கையில் இக் கிராமத்திற்கு வரும் தபால்களை தபால் ஊழியர்கள் இக் கிராமங்களில் உள்ள கடைகளில் ஒப்படைத்து விட்டுச் செல்வார்கள். அது என்ன கடிதமாக இருந்தாலும் சரி 27 வருடங்களாக வழக்கமான நடைமுறை இது. தபாற்காரர் கடிதப் பொதியைக் கொண்டு வந்து கடையில் ஒப்படைத்துச் சென்றதும் நாளாந்ததமாகப் பலவருட காலம் தபால் விநியோகம் செய்து வரும் கடைக்காரர்கள் சலிப்படைந்த நிலையில் கண்ணில் கண்டவர்களை அழைத்து "இந்தக் கடிதத்தை இவர் கையில் கொடு" என ஒப்படைத்து விடுகின்றனர். இவ்வாறு கொடுத்து விடும் கடிதம் உரிமையாளரிடம் கிடைப்பது அரிது. அல்லது தாமதமாகவே கிடைக்கும். இதனால் வேலை வாய்ப்புக்கள் உட்பட பல முக்கிய வாய்ப்புக்கள் தவறி விடுகின்றன.

நீண்ட காலமாக இவ்வாறு பல வாய்ப்புக்களை இழந்து வரும் இம்மக்களின் நிலையைக் கருத்திற் கொண்டு இப்பகுதியில் ஓர் உப தபாலகம் அமைக்க வேண்டும் என இங்கு வாழும் மக்கள் கோரி வருகின்றனர். (பிரதீபன்)

## மாவீரர் படிப்பக புனரமைப்பிற்கு நிர்வாகக் குழு தெரிவு

(உடையார் கட்டு)

உடையார்கட்டு சுதந்திரபுரம் மாவீரர் படிப்பக புனரமைப்பு நிர்வாகத் தெரிவிற்கான ஒன்று கூடல் உடையார்கட்டு தெற்கு தேசிய எழுச்சிப் பேரவையைச் சேர்ந்த அழகேசன் தலைமையில் சுதந்திரபுரம் சந்திபிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது. ஒன்றுகூடலில் கருத்துரைகளை முல்லை.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சின்னண்ணன் உடையார்கட்டு கிராமப்பொறுப்பாளர் எழில்வாணன் தே.எ. பேரவையைச் சேர்ந்த விஜயகுமார் ஆகியோர் வழங்கினர். இந்த மாவீரர் படிப்பகத்தின் புனரமைப்பு நிர்வாகத்தில் தலைவர், செயலாளர் உட்பட 12 பேர் அங்கம் வகிக்கின்றனர். (19)

## அறிமுக ஒன்றுகூடல்

விசுவமடு மேற்கு நெத்திலியாறு கிராம அபிவிருத்தி தொடர்பான நிக்கொட் நிறுவன அறிமுக ஒன்று கூடல் கடந்த வெள்ளி காலை பத்து மணிக்கு கிராம அலுவலர் தேவகி தலைமையில் ஆரம்பமானது. இவ்வொன்று கூடலில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தயானந்தா நிக்கொட் நிறுவன பிரதிநிதி, தமிழா புனர்வாழ்வுக்கழக முல்லை மாவட்டப் பணிப்பாளர் ஆகியோர் அபிவிருத்தி விடயமாக கருத்து வழங்கினார். (19)

# தமிழீழத் தேசிய துணைப்படைக்கு உறுப்பினர்களை இணைப்பது தொடர்கிறது

(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் துணைப் படைக்கு உறுப்பினர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. தேக ஆரோக்கியம் உடைய 18 தொடக்கம் 30 வயதுவரையான ஆண், பெண் இரு பாலாரும் இப்பணி நிலைக்கு விண்ணப்பிக்க முடியும் எனவும் இப்பணி நிலையில் இணைய விரும்புவோர் தங்கள் காவல் பணிமனைகளிலோ அல்லது கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழீழ காவல் துறை நடுவப்பணியகத்திற்கோ நேரில் சமுகம் தருமாறு தமிழீழ காவல்துறையினரின் ஆளணிப்பிரிவுப் பொறுப்பாளர் கலையரசன் கேட்டுள்ளார். தமிழீழத்தின் பல பகுதிகளில் இருந்து கணிசமான தொகையினர் இப்பணியில் இணைந்துள்ளதுடன் தென் தமிழீழத்தில் இருந்து வரும் விண்ணப்பதாரிகள் கேட்டுக் கொண்டதற்கு அமைவாகவே இக்கால நடிப்பு வழங்கப்பட்டுள்ளதென அறிய முடிவதுடன் இப் பணிநிலைக்கு மாதம் ஒன்றிற்கு 8500 ரூபா ஊதியமாக வழங்கப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (15)

# பூநகரி ப.நோ.கூ. சங்கத்தில் "சங்கமம்" பத்திரிகை வெளியீடு

சங்கம பத்திரிகையின் வெளியீட்டு விழா கடந்த 27ஆம் திகதி மாவட்ட கூட்டுறவு சபையின் ஆதரவுடன் பூநகரி ப.நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெற்றது.

இவ்விழாவின் முதல் நிகழ்வாக தேசியக்கொடியினைப் பூநகரி பிரதேச பொறுப்பாளார் ஈகைவேந்தன் ஏற்றிவைக்க, கூட்டுறவுக் கொடியை கிளி.மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத் தலைவர் இரத்தினசிங்கம் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து வரவேற்புரையை சங்கச்செயலாளர் ம. இராஜகோபால் ஆற்றினார்.

சிறப்புரைகளைக் கரைச்சி வடக்கு பொதுமுகாமையாளர் செல்வராசா, கிராமிய வங்கி சமாசத் தலைவர் குகராசா, பிரதேச பொறுப்பாளர் ஈகைவேந்தன், பிரதேசசபைச் செயலாளர் திருமதி. பவானி, தெ.ப. உற்பத்தி கூட்டுறவு சங்க பொது முகாமையாளர் சு.ஞானசுவேந்திரன் மாவட்டக் கூட்டுறவு சபைச் செயலாளர் சிவகுமாரி, மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவர் இரத்தினசிங்கம், பூநகரி ம.வி.உப அதிபர் இ.புஸ்பராசா, முன்னாள் துணைத் தலைவர் பொ.தங்கராசா, கமக்கார அமைப்புத் தலைவர் ஐயம்பிள்ளை ஆகியோர் ஆற்றினார்கள்.

வெளியீட்டு உரையினையும் மதிப்பீட்டு உரையினையும் தமிழீழ நிர்வாக சேவை இணைப்பாளர் க.மயூரன் ஆற்றினார் பதிலுரையினை மாவட்டக் கூட்டுறவு சங்கச் செயலாளர் ஆற்றினார்.

பொதுமுகாமையாளர் ந.பாலசுப்பிரமணியத்தின் நன்றியுரையுடன் இந்நிகழ்வு நிறைவு பெற்றது.

# உருத்திரபுரம் சிவநகர் அ.த.க.வில் நூலகம், சிறுவர்பூங்கா திறந்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

உருத்திரபுரம் சிவநகர் அ.த.க. பாடசாலையின் புதிய நூலகக் கட்டடம் மற்றும் சிறுவர் பூங்கா திறப்பு விழா கடந்த 29 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு பள்ளி முதல்வர் த. மனோகரன் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொண்டு, சிறுவர் பூங்காவின் பெயர்ப்பலகையினைத் திரை நீக்கம் செய்து வைத்ததுடன் பூங்காவினையும் திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட கிளி/மாவட்ட வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் புதிய நூலகக் கட்டிடத்தை சம்பிரதாயபூர்வமாக நாடாவினை வெட்டி திறந்து வைத்தார்.

திறப்பு விழாவினைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்வின் அரச அதிபர், கல்விப்பணிப்பாளர் ஆகியோர் பள்ளியின் வளர்ச்சியையும், பெற்றோர், நலன்விரும்பிகள் இதற்கு பெரும்பங்காற்றுவதையும் பாராட்டி உரை நிகழ்த்தினார்கள் இந்நிகழ்வின்போது புங்குடுதீவு அருள்மிகு அந்தோனியார் தெய்வக்குழந்தைகள் இல்ல நிதி உதவி மற்றும் அரச அதிபரின் அனுசரணையுடன் 50 தென்னம்பிள்ளைகள் வழங்கப்பட்டதுடன் செந்தூரன் முன்பள்ளிச் சிறார்களுக்கும் சிவநகர் அ.த.க. பள்ளியின் ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 5 வரையிலான மாணவர்களுக்கும் அப்பியாசக் கொப்பிகளை அரச அதிபர், வலயக் கல்விப்பணிப்பாளர், கரைச்சி உதவி அரசாங்க அதிபர் பொன் நித்தியானந்தம் ஆகியோர் வழங்கினர். கிளி/வலயக்கல்விப் பணிப்பாளரின் அனுசரணையுடன் இப்பள்ளியின் நூலகத்திற்கான நூல்களை வழங்குவதற்கு ஏதுவாக யுனிசெப் பிரதி நிதிகள் குழுவினைச் சேர்ந்த அலுவலர்களும் வருகைதந்து பார்வை யிட்டுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# கிணற்றுள் தவறி வீழ்ந்து முதியவர் பரிதாப மரணம்

(உடையார் கட்டு)

விசுவமடு- வள்ளுவர் புரத்தில் வயோதிபர் ஒருவர் கிணற்றினுள் தவறி வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் கடந்த 21 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

முன்பு வெற்றிலைத் தோட்டம் வைத்திருந்த இவர் சம்பவ தினம் கட்டில்லாத கிணற்று கரைப்பகுதியில் காணப்பட்ட புல், பூண்டுகளை செதுக்கிக் கொண்டிருக்கும் போது தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். வள்ளுவர் புரத்தில் வசித்து வந்தவரான மாகோ அல்லது சின்னையா (வயது 90) என்ற வயோதிபரே மரணமடைந்தவர் ஆவார். (19)

## ஒன்று கூடல்

உடையார்கட்டுக் கிராமங்களின் தேசிய எழுச்சிப்பேரவைக்கான ஒன்று கூடல் கடந்த வெள்ளிக் கிழமை 4.00மணிக்கு உடையார்கட்டு அரசியல்துறைப் பொறுப்பாளர் எழில்வாணன் தலைமையில் இடம் பெற்றது. உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இவ்வொன்று கூடலில் தே.எ. பேரவை எமது தேசத்தில் ஆற்ற வேண்டிய பணிவிடயமாக உடையார்கட்டு வடக்கு கிராமஅலுவலர், முல்லை.மாவட்ட அரசியல்துறை துணை பொறுப்பாளர் சின்னண்ணன், முல்லை.மாவட்ட தே.எ.பேரவை பொறுப்பாளர் மயூரன் ஆகியோர் கருத்துக்கள் வழங்கினர். (19)

# விசுவமடு 15 முன்பள்ளிகளுக்கிடையே சிறப்புற நடந்த பெரு விளையாட்டு விழா



(உடையார்கட்டு)

சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன ஆளுகைக்குட்பட்ட 15 முன்பள்ளிச் சிறார்களுக்கான விசுவமடு பிரதேச முன்பள்ளி பெரு விளையாட்டு விழா தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடன் கடந்த செவ்வாய்க்கிழமை 2.00 மணிக்கு உடையார் கட்டு மகா வித்தியாலய அலங்கரிக்கப்பட்ட மைதானத்தில் சோழர் இல்லம் வசீகரன் சிறுவர் பூங்காச் சிறார்களின் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் ஆரம்பமானது.

பிரதேச முன் பள்ளி சிறார்களின் பெருவிளையாட்டு விழாவிற்கான பொதுச்சுடரினை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினரும் முதன்மை விருந்தினருமான ச.கனகரத்தினம் ஏற்ற, தமிழீழத் தேசியக் கொடியை உடையார் கட்டு அரசியல் துறையைச் சேர்ந்த எழில்வாணண் ஏற்றினார். தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக் கழக கொடியைத் தமிழர் புனர் வாழ்வுக் கழக முல்லை. மாவட்ட பணிப்பாளர் தமிழினியன் ஏற்றி வைத்தார். பெருவிளையாட்டு விழாவிற்கான ஆசியுரையை திருமதி சுவாமிநாதன் வழங்க வரவேற்புரையுடன் விளையாட்டு விழாவின் மைதான நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சிறார்களின் திறனாய்வு விளையாட்டுக்கள், இசைவும் அசைவும், வினோத உடை என்பவற்றுடன் தமது பிள்ளைகளின் திறன்களைக் காணவந்த பெற்றோர்க்கான நிகழ்வும் இடம் பெற்றது. பெருவிளையாட்டு விழாவிற்கான சிறப்புரைகளை முல்லை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முகுந்தன், பாராளுமன்ற உறுப்பினர் கனகரத்தினம் ஆகியோர் வழங்கினர். இவ் விளையாட்டு விழாவை இப்பகுதி மக்கள் ஆர்வத்துடன் கண்டு களித்ததை அவதானிக்க கூடியதாக இருந்தததது. (19)

# கரைதுறைப்பற்று உ.அ பணிமனையில் சிறுவர்கள் தொடர்பான செயலமர்வு

கரைதுறைப் பற்று உதவி அரச அதிபர் பணிமனையில் சிறுவர் நன்னடத்தை தொடர்பான செயலமர்வு கடந்த புதன் கிழமை கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் திரு.காசிப்பிள்ளை தலைமையில் காலை 10 மணிக்கு ஆரம்பமானது.

இதில் சிறுவர் உரிமை தொடர்பாக புதுக்குடியிருப்பு சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் செல்வி செ.சந்திரா கருத்துரை வழங்கினார். சிறுவர்கள் பாடசாலையில் எவ்வாறு துஸ்பிரயோகங்கம் செய்யப்படுகின்றார்கள். என்பது தொடர்பாக வ.க.ப. உத்தியோகத்தர் சுந்தரலிங்கம் கருத்துரை வழங்கினார்.

சிறுவர் நன்னடத்தை தொடர்பாக கரைதுறைப்பற்று சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் வி.சிவபால சுப்பிரமணியம் கருத்துரை வழங்கினார். (20)

# கலாசார சீரழிவுகளை ஏற்படுத்துவதன் மூலம்

# போராட்டத்தை நசுக்க படைத்தலைமை முயற்சி



### – யாழ். பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன்

**கலாசாரச் சீரழிவுகளை ஏற்படுத்துவதன் மூலம் தமிழீழ விடுதலைப் பேராட்டத்தை நசுக்க இராணுவத் தலைமை முற்படுவதாக யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சி.கஜேந்திரன குற்றம் சாட்டியுள்ளார்.**

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் யாழ். பணிமனையில் கடந்த வியாழன் இடம்பெற்ற சந்திப்பில் விசேட விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன் வைத்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் "இவ்வாறான நோக்குடன் தனியார் கல்வி நிலையங்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பலர் யாழ். மாவட்டத்தின் பல இடங்களிலும் தமிழ் கற்று வருகின்றனர். கல்விக்கூடங்களூடாக மாணவர்களுடன் அவர்கள் நெருங்கிய தொடர்புகளை பேணிவருவதாகத் தெரிவித்த அவர் இத்தொடர்புகள் ஊடாகவே கலாசார சீரழிவு களை உருவாக்கும் ஒளிப்பட நாடாக்களும் மற்றும் ஆபாச சிற்றிதழ்களும் விநியோகிக்கப்படுவது கண்டறியப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாக குறித்த கல்வி நிலைய நிர்வாகங்களுக்கும், மாணவர்களுக்கும் உரிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடல்களை நடாத்தி தாம் வருதாகவும் கூறினார்.

இதேபோன்று குடாநாட்டிலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் இராணுவ முகாங்களை அண்டிய சூழலில் இருப்பதாகவும் அதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் மிகுந்த நெருக்கடிகளுக்குள்ளாகி வருவதாகவும் தெரிவித்த அவர் குடாநாட்டு மாணவர்களிடையே விழிப்புனர்வை ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள் அனைத்துத் தரப்பாலும் முன்னெடுக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார். (27)

# அடிப்படை வசதிகள் இன்மையால் மீள் குடியமர்ந்தோர் பெரும் அவலம்

## -நிலைமைகளை அவதானிக்கப் படையினர் தடை

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கு இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை அண்மித்தபகுதிகளில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் அடிப்படை சுகாதார வசதிகள் அற்ற நிலையிலேயே வாழ்ந்து வருகின்றனர்.

படையினரால் அண்மையில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட கைதடி நாவற்குழி தனங்கிளப்பு கோயிலாக்கண்டி ஆகிய பிரதேசங்களில் மீளக்குடியமர்ந்த மக்களே இத்தகைய அடிப்படை சுகாதார வசதிகள் இன்றி வாழ்ந்து வருகின்றனர்.

குறிப்பாக குடிநீர் வசதிகள் மலசலகூட வசதிகள் போன்ற அடிப்படை வசதிகள் காணப்படாததால் தமது அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலை காணப்படுகிறது.

இதேவேளை படையினரால் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் சென்று சுகாதார நிலைமைகள் உட்பட மக்களின் பிரச்சனைகளை அறிவதற்கு படையினர் மிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (33)

## - திருகோணமலை நிலாவெளியில் -

# ஆசிய பசுபிக் மாணவர் ஒன்றுகூடலில் பங்கேற்ற மாணவனுக்குப் பாராட்டு

(திருகோணமலை)

ஜப்பானில் நடைபெற்ற ஆசிய பசுபிக் நாடுகளின் மாணவர்களின் சமாதான ஒன்று கூடலில் பங்கு பற்றிவிட்டு தாயகம் திரும்பிய திருகோணமலை மாவட்டம் நிலாவெளி தமிழ் மகாவித்தியாலயம் மாணவன் செல்வன். உதயகுமாரன் தட்ஷனனுக்கு மகாவித்தியாலய திறந்த வெளியரங்கில் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

2003 ஆம் ஆண்டு ஐந்தாம் தரம் புலமைப்பரிசில் பரீட்சையில் 174 புள்ளிகளைப்பெற்று அகில இலங்கைரீதியில் நான்காம் இடத்தைச் பெற்றதன் மூலம் ஜப்பானில் ஜுலை 14 தொடக்கம் 27 ஆம் திகதி வரை நடைபெற்ற சமாதான ஒன்றுகூடல் பங்குபற்றும் வாய்ப்பை தட்ஷனன் பெற்றார். நாடு திரும்பிய தட்ஷனன் நிலாவெளி கூட்டுறவுச் சங்கமுன்றலிலிருந்து வித்தியாலய அதிபர் சீ.மதியழகன் தலைமையில் பாண்ட் வாத்திய இசையுடன் ஊர் வலமாக திறந்த வெளியரங்கிற்கு அழைத்துவரப்பட்டார். முதன்மை விருந்தினரான திருமலை வலயக் கல்விப்பணிப்பாளர் கு.திலகரத்தினம், உதவிக் கல்விப்பணிப்பாளர் யூகப்றான், பொறுப்பாசிரியை செல்வி மு.லலிதா ஆகியோரும் ஊர்வலத்தில் பங்குபற்றினர். மாணவன் தட்ஷனனின் பெற்றோரான உதயகுமாரன் தம்பதியினரும் ஊர்வலத்தில் அழைத்து வரப்பட்டனர்.

தட்ஷனன் சக மாணவர்களுடன் தனது ஜப்பான் அனுபவங்ளை மாணவ அறிவிப்பாளர் செல்வி கிசாந்தினிக்கு வழங்கிய பேட்டி மூலம் அந்நிகழ்வில் பகிர்ந்து கொண்டார். (25)

# டெனிஸ் கண்ணிவெடியகற்றும் பணி மீண்டும் ஆரம்பம்

இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கண்ணிவெடியகற்றல் பணிகளை சர்வதேச தொண்டமைப்பான டெனிஸ் கண்ணிவெடியகற்றும் நிறுவனம் பருத்தித்துறை கற்கோவளம் பகுதியில் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

அண்மையில் குறித்த பகுதியில் மீட்கப்பட்டு அழிக்கவென வைத்திருந்த ஒரு தொகுதி மிதிவெடிகள் இரவு வேளையில் இனந்தெரியாத நபர்களால் எடுத்துச் செல்லப்பட்டதை அடுத்து தற்காலிகமாக இப்பகுதியில் கண்ணிவெடியகற்றல் பணிகளை அவ்வமைப்பு நிறுத்தியிருந்தது. எனினும் மீண்டும் கடந்த வியாழக்கிழமை முதல் அது தனது பணிகளை ஆரம்பித்துள்ளது.

வெடிபொருட்கள் அகற்றப்பட்ட பகுதிகளில் திருடப்பட்ட மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தில் மீண்டும் அப்பகுதி துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்து ஏனைய பகுதிகளிலும் கண்ணிவெடி மிதிவெடி, அகற்றல் பணி தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அகற்றப்படும் வெடிபொருட்கள் குவிக்கப்படும் இடத்திற்கு பாதுகாப்பு ஊழியர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (27)

## வீதிசெப்பனிடல்

2003 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட வீதிகள் மீண்டும் தார் ஊற்றி செப்பனிடப்பட்டிருப்பதாக சாவகச்சேரி நகரசபை தெரிவிக்கிறது. இதன்படி யாழ் வீதி இரண்டாம் ஒழுங்கை, தாளையடி அம்பன் கிழக்கு வீதி, சங்கத்தானை இரண்டாம் ஒழுங்கை, கண்டுவில் ஒழுங்கை, பங்களாவீதி நெல்லியடி முருகன் வீதி மந்துவில் வீதி இரண்டாம் குறுக்குத்தெரு போன்ற வீதிகளே 4 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் மீள்தார் ஊற்றப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை புனரமைப்பு நல்லிணக்க அமைச்சு ஒதுக்கிய நிதியுடன் நகரசபையின் நிதியையும் சேர்த்து இரண்டு சாலைகள் புனரமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மந்துவில் அம்மன் கோயில் வீதி 11 லட்சத்து 47 ஆயிரம் ரூபாய் செலவிலும் பிலான் ஒழுங்கை 7 லட்சத்து, 64 ஆயிரம் செலவில் புனரமைக்கபட்டு இருப்பதாத் தெரிவிக்கப்படுகிறது. (28)

# கரவெட்டிப் பகுதியில் சமகால அரசியல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடாத்தப்படும் சமகால அரசியல் கருத்தரங்கின் 17ஆவது தொடர் நாளை பிற்பகல் 3.00 மணிக்கு கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறும்.

"சமாதான முயற்சிகளுக்கான தடைகளும் உலக நாடுகளின் கொள்கை வகுப்புக்களும் " எனும் தலைப்பில் யாழ்.பல்கலைக்கழக அரசியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கே.ரி.கனகலிங்கம் இக்கருத்தரங்கில் கருத்துரை வழங்கவுள்ளார். (36)

# எழுதுமட்டுவாள் அ.த.க பாடசாலை விரைவில் சொந்த இடத்தில் இயங்கும்

எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை விரைவில் அதன் பழைய இடத்தில் இயங்க இருப்பதாக இப்பாடசாலையில் அதிபர் ச.செல்வச்சந்திரன் அவர்கள் தெரிவிக்கின்றார். இப்பாடசாலையில் கடந்த இரண்டு வருடங்களாக சிறிலங்காப்படைகளின் இராணுவ முகாமாகச் செயற்பட்டு வந்தது. கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இப்பகுதி மக்களின் போராட்டத்தின் விளைவாக படையினரால் விடுவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

உடைந்துபோயுள்ள இப்பாடசாலையை மறுசீரமைத்துக் கட்டடங்களைக் கட்ட சுவிஸ் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் என்ற தனியார் நிறுவனம் முன் வந்திருக்கிறது. இதற்கான பணிகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.தற்பொழுது எழுதுமட்டுவாள தமிழ்க்கலவன் பாடசாலை மிருசுவில் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையுடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளது. (28)

# கிராம சேவையாளரின் தரத்தை உயர்த்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றி வரும் கிராம சேவையாளர்களின் தரத்தை மேம்படுத்துவதற்கு "நீர்ப்" அமைப்பினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தின் மக்களுக்கான அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் என்பன கிராம சேவையாளர்கள் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும் யாழ். மாவட்டத்தில் சேவையில் உள்ள கிராம சேவையாளருக்கு துறைசார் நிபுணத்துவங்கள் இன்மையால் மக்களுக்கான அபிவிருத்தி புனர்வாழ்வு நடவடிக்கைகள் என்பனவற்றில் பாதிப்பேற்படுவதை தவிர்க்கவே "நீர்ப்" இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இதன் ஓர் அம்சமாக கிராம சேவகர்களுக்கு ஆற்றல் மேம்பாட்டுக் கருத்தரங்குகளை நீர்ப் அமைப்பு நடத்தி வருகிறது. (33)

## - சாவகச்சேரி நகரசபைக்கு -

# வாகனப் பற்றாக்குறையால் கழிவுகளை அகற்றுவதில் சிரமம்

சாவகச்சேரி நகரபைக்கு உட்பட்ட பகுதிகளில் கழிவு குப்பைகளை அகற்றுவதற்கு வாகனப் பற்றாக்குறையால் நகரசபை திண்டாடுவதாக தெரிய வருகிறது. இதனால் நகரின் பல்வேறு பகுதிகளில் தேங்கும் கழிவுப் பொருட்களை உடனுக்குடன் அப்புறப்படுத்துவதில் பெரும் சிக்கல் ஏற்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நகரசபையிடம் தற்பொழுது இரட்டைச்சில் உழவு இயந்திரம் ஒன்றும் மூன்றுகை வண்டில்கள் மட்டுமே பாவனையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. மேலதிக தேவைகருதி உழவு இயந்திரம் ஒன்று வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. நிக்கொட் என்ற நிறுவனம் நகரசபைக்கு கடந்த வருடம் இரண்டு உழவு இயந்திரங்கள் வழங்குவதாக உறுதியளித்தும்கூட இதுவரை உழவு இயந்திரங்கள் நகரசபைக்கு வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. ஏற்கனவே நகரசபைக்கு இருந்த இரண்டு உழவு இழந்திரங்களும ஒரு தண்ணீர் கனரக கொள்தாங்கியும், (பவுசர்) டீசல் ரோலர் ஒன்றும், யுத்தகாலத்தில் காணாமல் போய்விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. மற்றும் நகரத்தின் இறைச்சிக் கடைகளில் வெட்டப்படும் கழிவுப் பொருட்கள் கொட்டும் இடம் உயர் பாதுகாப்பு வல யத்தினுள் அமைந்துள்ளதால் இதற்கு பதிலாய் கழிவுகளை கொட்ட புதிய இடம் ஒன்று தேர்வு செய்யப்பட்டு இருப்பதாக நகரசபைசெயலாளர் மூ.செ.சரவணபவ தெரிவிக்கிறார். (28)

## –உல்லாசப் பயணத்துறை கட்டடத்திலிருந்து–

# டக்ளஸ் தேவானந்தாவை வெளியேறுமாறு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு

சிறிலங்காவின் இந்து காலாச்சார அமைச்சு புதிதாகக் குடியேறியுள்ள கட்டத்தொகுதியிலிருந்து டக்ளஸ் தேவானந்தா விலகிச் செல்ல வேண்டுமென கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொள்ளுப்பிட்டியில் முன்னர் அமைந்திருந்த டக்ளஸ் தேவானந்தவின் இந்து விவகார அமைச்சு, டக்ளஸ் தேவானந்தா மீதான கொலை முயற்சியை அடுத்து, உல்லாசப் பயணத்துறை அமைச்சு அமைந்திருக்கும் கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டிருந்தது.

சிறிலங்கா அரசாங்கத்தால் தனியார் ஒருவரிடமிருந்து ஒன்பது மாடிகளைக் கொண்ட இக்கட்டடத்தொகுதி வாடகைக்குப் பெறப்பட்டதாகும். இந்நிலையில், உல்லாசப்பயணத்துறை அமைச்சுக்கு வழங்கப்பட்ட கட்டடத் தொகுதியில் டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சுக்கு இடம் வழங்கப்பட்டமைக்கு எதிராக கட்டட உரிமையாளரால் வழக்குத் தொடரப்பட்டிருந்தது. இதனையடுத்தே, குறித்த கட்டடத் தொகுதியிலிருந்து டக்ளஸ் தேவானந்தாவின் அமைச்சு விலகிச்செல்ல வேண்டுமென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

# அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்த பாராளுமன்றத்தில் பெரும்பான்மை தேவையில்லை

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்கள் கடந்தும் இன்னும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கமுடியாமல் திண்டாடு கின்றது. ஆகவே சிறுபான்மைக் கட்சி களின் ஆதரவைப் பெறும் முயற்சியில் அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. சிறுபானமை அரசுக்கு நாட்டின் அபிவிருத்தி மேற்கொள் வது கடினம் என என்னால் ஒத்துக் கொள்ள முடியாது. சிறுபான்மையாக உள்ள அரசுக்கும் நாட்டின் அபிவிருத்திகளை மேற்கொள்ள முடியும். கடந்த ஏப்ரல மாதம். நடந்த பொதுத்தேர்தலிலும், மாகா ணசபைத் தேர்தலிலும் நாட்டை ஆட்சி செய்வதற்கு மக்கள் வரம் தந்துள்ளனர்.

இத் தேர்தலில் இரண்டு கட்சிகளும் குறைந்த வாக்குகளையே பெற்றுள்ளன. ஆகவே எதிர்வரும் வரவுசெலவுத்திட்ட வாக்கெடுப்பில் இரண்டுமுறை தோல்வி அரசுக்கு ஏற்பட்டால் அரசாங்கத்தைக் கலைக்க நேரிடும். இல்லையேல் அடுத்த ஏப்ரல் மாதம் வரை அரசாங்கத்தை நடத்த பாராளுமன்றத்தை நிச்சயமாகக் கலைக்க வேண்டும்.

சாதாரண ஒரு மசோதா எதிர்க்கட்சி யினரால் கொண்டுவரப்பட்டு அதில் அர சாங்கம் தோல்விகண்டால் விரைவில் அர சாங்கத்திற்குச் சார்பாக நம்பிக்கைத் தீர் மானம் கொண்டுவந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றி அரசாங்கத்தை தொடர்ந்து நடத்துவதற்கு பிரதமருக்கு அதிகாரம் உண்டு. அன்று டட்லிசேனாநாயக்கா சபா நாயகர் தெரிவின் பொழுது அரசு தோல்வி யைத் தழுவியது. அதற்கு டட்லி அவர்கள் சனநாயகத்திற்கு மதிப்பளித்து பாராளுமன் றத்தைக் கலைத்துக் கௌரவமாகப் பதவி விலகினார். ஆனால் இன்றைய அரசு சன நாயகத்தை மதிக்கவில்லை. இன்றும் ஆட் சியை நடத்துகின்றனர். தொடர்ந்து பாரா ளுமன்றத்தில் பெரும்பான்மையை அர சாங்கம் நிரூபிக்கத் தவறினால் அரசாங் கத்தை நடத்த முடியாது.

நிச்சயமாக பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தல் வைக்க வேண்டும். ஆகவே ஒரு களுக்குப் பிறக்கின்றது.

எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் பெரும் பான்மைப் பலம் பாராளுமன்றத்தில் இல்லா விட்டால் பொருளாதாரத்தில் பெரிதும் பாதிப்புகள் ஏற்படும். வெளிநாட்டு உதவி கள் கிடைக்காது. பொருளாதாரத்தைச் சிறந்த முறையில் கட்டி எழுப்பமுடியாது. தீர்மானங்கள் எடுப்பதற்கு அரசாங்க நிர் வாகிகள் பயப்படுவார்கள். இதனால் நல்ல பொருளாதார முன்னெடுப்புக்கள் தடைப் பட்டு விடும். இதனால் மக்கள் அரசாங் கத்தில் வெறுப்புக்கொள்வார்கள். ஆகவே இப்படியான நிலைமை ஏற்படும் பொழுது அரசாங்கம் ஆட்சியைப் பெரும்பான்மை பலம் பொருந்திய கட்சியிடம் கையளித்து விலகுவதே சிறந்த வழியாகும். ஆனால் எங்கள் நாட்டில் இப்பகுதி செய்யமாட் டார்கள். வைக்கோல் பட்டறையின் மேல் ஏறி இருக்கும் நாய் போல இப்பொழுது எமது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

நமது நாட்டின் சரித்திரத்தில் இப்படி அரசாங்கத்தை எப்படியாவது காப்பாற்ற வேண்டும். இதுவே இப்பொழுது சந்திரிகா வின் அரசியல் காய் நகர்த்தலாகும்.

தற்பொழுது நாட்டில் மூன்றாவது சக்தியாக விளங்கும் ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து இருந்தாலும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இந்த அரசாங்கத்திற்கு கிடையாது. இப்படி இவர்கள் ஆட்சி செய்யும் பொழுது மக்கள் சிந்தனைகள் மாறுபடும். ஆகவே எதிர்காலத்தில் நாட்டு மக்களின் செல்வாக்கு இருக்கும் என்பதை





வருடத்திற் கிடையில் பாராளு மன்றத்தைக் கலைக்க நேரிட் டால் அடுத்த அதிக பாராளு மன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சியை அரசாங்கம் அமைப்பதற்கு சனாதிபதி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாட்டின் தற்போதைய நிலைமைகளின்படி எதிர்க்கட்சி யினருக்கு அரசாங்கத்தைக் கவிழ்த்து ஆட்சியைக் கைப் பற்ற வேண்டும் என்ற எண்ணம் கிடையாது. ஏனென்றால் எதிரணியினர் பலம் தற்பொழுது குறைந்துள்ளது. எதிர்க் கட்சியில் உட் பூசல்கள் அதிகரித்த வண்ணம் உள்ளது. கட்சி வேட்பாளர்களி டம் நிதிகிடையாது. பொதுத்தேர்தலை மக்களும் நிராகரிப்பார்கள். கடந்த மாகாண சபைத் தேர்தலில் 50சதவீதமானவர்கள் வாக்களிக்கவில்லை.

முடியும். அதற்கிடையில் அரசாங்கத்தை சனாதிபதியால் கலைக்கமுடியாது.

சனநாயக பாராளுமன்ற மரபின்படி பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் உறுப் பினர்களின் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றஒருவரைப் பிரதமராக்குவதற்கு சனாதிபதிக்குப் பூரண அதிகாரம் உண்டு. பாராளுமன்ற அங்கத்தவர்களில் கூடுத லானோரின் ஆதரவு இருந்தால் பிரதமர் ஒரு வரை நியமிப்பதில் சிக்கல்கள் ஏற்படாது.

இதற்குப் பாராளுமன்றத்தில் உள்ள முழு அங்கத்தவர்களின் ஆதரவு தேவைப் படாது ஆகவே எதிர்க்கட்சியினர் பெரும் பான்மையுடன் இருந்தாலும் பிரதமரின் நியமனம் எந்த விதத்திலும் பாதிப்பை ஏற்படுத்தாது. ஆகவே பாராளுமன்றத்தில் அதிக செல்வாக்கைப் பெற்றுள்ள ஒருவர் பிரதமராகுவதில் எந்தப் பிரச்சினையும் வராது தற்போதைய பிரதமர் நாட்டின் அபி விருத்திக்கும், பொதுமக்களின் கருத்துக் களுக்கும் மதிப்புக் கொடுத்து எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் கருத்துக் களுக்கு மதிப்புக் கொடுத்து நடந்து கொண்டால் எதிர்க்கட்சியினர் நிச்சயமாகப் பிரதமருக்கு ஆதரவு வழங்க வேண்டி வரும்.

கடந்த காலங்களில் இந்தியாவிலும் சிறுபான்மை அரசுகள் பல ஆட்சிபுரிந்துள் ளதை நாம் நன்கு அறிந்துள்ளோம். 1960 ஆம் ஆண்டு சிறுபான்மைப் பலத்துடன் அன்றைய பிரதமர் டட்லிசேனாநாயக்க ஐக்கிய தேசியக்கட்சி அரசை நடத்தினார். ஆனால் சபாநாயகர் தேர்வின் போது பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாதபடியால் ஆட்சியை டட்லிசேனா நாயக்க கலைத்து கௌரவமாகப் பிரதம பதவியை ராஜினாமாச் செய்தார். எமது பாராளுமன்ற சம்பிரதாயத்தில் பாராளு மன்றத்தில் அரசாங்கத்தின் சாதாரண பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்து அந்தத் தீர்மான வாக்கெடுப்பில் அரசு தோல்வி கண்டால் அரசாங்கம் பாரா ளுமன்றத்தைக் கலைக்கத் தேவையில்லை. ஆனால் வரவுசெலவுத்திட்டத்தை இரண்டு தடவைகள் பாராமன்றத்தில் வாக்கெடுப் புக்கு விட்டு அதில்அரசு தோல்வி கண்டால்

பலம் இல்லாத அரசாங்கத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் ஏனைய சிறுபான்மைக் கட்சிகள் விரும்பாது அப்பொழுது எதிர்க்கட்சியினர் நிபந்தனைகளை விதித்து அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முன்வந்தாலும் அவர்கள் பாராளுமன்றத்தில் அமைச்சுப் பொறுப்புக் களை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

1994ஆம் ஆண்டு தொடக்கம் 2000ஆம் ஆண்டு காலங்களில் பொதுசன ஐக்கிய முன்னணியினருக்கும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இருக்கவில்லை. வரவுசெலவுத் திட்டம் 15,20 அதிகப்படி யான வாக்குகளினால் நிறைவேற்றியது தமிழ் சிறுபான்மை கட்சியினரின் ஆதரவு இருந்தமையால் அரசாங்கம் பாராளுமன் றத்தில் வரவுசெலவுத் திட்டத்தை நிறை வேற்றியது. வேறுநாடுகளிலும் வெளியிலி ருந்து அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி யதை நாங்கள் அறிவோம்.

சிறுபான்மை அரசாங்கம் நாட்டில் ஆட்சி புரியும் பொழுது சில நன்மையான காரியங்களைச் செய்வதற்கு இடமுண்டு என ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். ஆனால் தற்பொழுது எதிர்க்கட்சியினர் அரச கூட்டு ஸ்தாபனங்களுக்கு தலைவர் கள் நியமிக்கும் பொழுது அரசியல் யாப்புச்சபையின் அங்கீகாரங்களைப் பெற்றபின் அவர்களால் பதவிகளை வகிக்க முடியும் இதுவே தற்போதைய எதிர்க் கட்சியினரின் வேண்டுகோள்.

நாட்டின் சுதந்திர ஊடகத் துறையை ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சி செய்த இரண்டு வருடங்களில் ஏன் நியமிக்க வில்லை? பாராளுமன்றத்தில் பெரும்பானமை இருந்தும் ஏன் அவர்கள் இதை நிறை வேற்றவில்லை. எதிர்க்கட்சி வரிசையில் வந்த பிறகுதான் நல்ல அரசியல் ஞானம் இவர்

யான சம்பவம் 1953 ஆம் ஆண்டு ஏற்பட் டது. டட்லி சேனநாயக்கா ஆட்சிக்காலத்தில் அரசாங்கத்திற்கு பெரும் நெருக்கடி வந்த பொழுது டட்லி சேனநாயக்க அவர்கள் முழு ஆட்சிப் பொறுப்பையும் சேர்ஜோன் கொத்தலாவலையிடம் கையளித்து கௌர வமாக விலகிக்கொண்டார். தற்போதைய அரசாங்கம் பொதுத் தேர்தலிலும், மாகாண சபைத்தேர்தலிலும் வெற்றியீட்டியமையால் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு எதிர்கட்சி யினரால் தற்பொழுது முடியாது. ஏனெனில் மக்கள் ஆதரவு தற்போதைய அரசாங்

**லங்காதீப**
**சேம் விஜேசிங்க**
**மொழியாக்கம் அ. சக்திவேல்**

கத்திற்கு உண்டு. இதற்கு எதிர்கட்சியினர் மதிப்பளிக்க வேண்டும். சில நன்மைகள் தரும திட்டங்களை அரசாங்கம் முன்வைத்தால் அதற்கு எதிர்கட்சியினரின் ஆதரவு அரசுக்கு கிடைக்கும். அரசாங்கம் பதவி ஏற்ற நாளில் இருந்து அதை கவிழ்ப்பதற்கு எதிர்கட்சியினர் செயற்படக்கூடாது. மக்க ளுக்கு எதிரான காரியங்களை அரசாங்கம் நடைமுறைபடுத்தும் பொழுது அதற்கு முழு எதிர்ப்பைத் தெரிவித்து மக்களின் ஆதர வைப்பெற்றபின் அரசாங்கத்தைக் கவிழ்த்து தேர்தலில் வெற்றிபெற முடியும்.

ஆனால் சந்திரிகாவும், ரணிலும் ஒன்று கூடி நாட்டில் எதையும் செய்ய மாட்டார்கள் அது தெரிந்த விடயம். தற்போது நாட்டில் கொந்தளித்துக் கொண்டிருக்கும் இனப் பிரச்சினைக்கு சந்திரிகாவும், ரணிலும் ஒன்றிணைந்து செயற்படாமல் இருப்பது நாட்டிற்கு ஒரு சாபக்கேடாகும். பெரும் பான்மைப்பலம் கொண்ட ரணிலின் அரசாங்கத்தை கலைத்துவிட்டு ஆட்சியைக் கைபற்றிய சந்திரிகா இப்பொழுது தனது ஆட்சி சிறுபான்மை பலத்துடன் இருப்ப தால் ஆட்சியைத் தொடர்ந்து நடத்துவதற் கும் பெரும் அவதிப்படுகிறார். தினை விதைத்தவன் தினை அறுப்பான் வினை விதைத்தவன் வினை அறுப்பான் இது சந்திரிகாவுக்கும் பொருந்தும்.

இந்த நாட்டில் சிறுபான்மை கட்சிகள் ஆட்சிபீடம் ஏறியவர்களை ஆட்டிப்படைக் கின்ற அவர்களின் கோரிக்கைகளை நிறை வேற்றி அக்கட்சிகள் கேட்கும் உரிமை களைக் கொடுக்கின்றன சிறுபான்மையின ரின் ஆதரவு இல்லாமல் பெரும்பான்மையி னர் ஆட்சி அமைத்தது கிடையாது. அரசாங் கம் சிறுபான்மையினரின் ஆதரவு தேவைப்படாது. நாங்கள் தனியாக ஆட்சி அமைப்போம் என்று மேடைகளில் முழங் கிய சந்திரிகா அம்மையார் தற்பொழுது சிறுபான்மைக் கட்சியினரிடம் மண்டியிட்டு இருக்கின்றார். அவர்கள் கேட்கும் உரிமை கள் எல்லாவற்றையும் கொடுத்து தனது

கூற முடியாது. தற்போதைய ஆட்சி முறையை மாற்றி அமைக்கும் திட்டத்திற்கு எதிர்கட்சியில் அல்லது அரசாங்க கட்சியில் பலருக்கு விருப்பம் இல்லை. வறியமக்கள் வாழும் பிரதேசங்களில் 10,000 குளங்களை புனரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பித் துள்ளன. அம்பாந்தோட்டை போன்ற கடும் வரட்சி நிலவும் மாவட்டத்தில் 1000 குளங்களின் புனர்நிர்மாண வேலைகள் நடைபெறுகின் றது. இது நல்ல காரியம். ஐக்கிய தேசிய முன்னணி வேலைகள் ஆரம்பிப்பதற்கு கால அவகாசம் இருந்தது. அவர்கள் இவற்றைச் செய்யவில்லை. அவர்கள் நாட்டின் பெரிய அபிவிருத்தித் திட்டங் களை ஆரம்பிப்பதற்கே நடவடிக்கைகளை மேற்கொண்டனர். அம்பாந்தோட்டை வெல்லவாய போன்ற கமக்காரர் வாழும் இடங்களில் விமான நிலையம் அமைக்கப் போகிறோம் என்று பிரச்சாரம் செய்தார் களே தவிர தமக்கு வாக்களித்த விவசாய மக்களுக்கு அவர்கள் எதுவும் செய்யவில்லை. விவசாயிகளின் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்காமல் விமான நிலையம் அமைப்போம என்ற வாக்குறுதியை மக்கள் முன்வைத் தார்கள். இத்திட்டம் அங்கு மக்கள் முன்னி லையில் எடுபடவில்லை. ஆனால் தற்போ தைய அரசாங்கம் இவைகளை நன்கு உணர்ந்து செயல்படுகின்றது. இது வரவேற்க வேண்டிய விடயமாகும். இதைத்தவிர்த்து கல்வி, சுகாதாரம், போக்குவரத்து இவை களை நாட்டில் அபிவிருத்தி செய்யப் போகி றது. இதை எதிர்கட்சியினர் விமர்சிக்க முடியாது. இதைத் தடுக்கவும் முடியாது. எதிர்ப்புத் தெரிவிக்கவும் முடியாது.

இலங்கை வறுமையான நாடு ஆட் சிக்கு வந்த கட்சிகள் நாட்டின் வறுமையை ஒழிப்போம் என்று ஆட்சியை கைப் பற்றி னார்கள். பதவிக்கு வந்த எந்த ஒரு அரசாங் கமும் வறுமையை ஒழிக்கவில்லை. தற்போ தைய அரசாங்கம் கிராமத்தில் வாழும் மக்களை ஒன்று திரட்டிய அவர்களின் சொந்த நிலங்களில் விவசாயம் செய்வதற்கு ஊக்கு விப்பு கொடுப்பார்களேயானால் நாட்டை ஓரளவு வறுமையிலிருந்து காப்பாற்ற முடியும் மற்றும் மீன், கருவாடு, மாசி போன்றவை கள் எமது நாட்டில் உற்பத்தி செய்யலாம். இவற்றை உற்பத்தி செய்யத் தேவையான கடல் வளம் எமது நாட்டில் உண்டு. இவை கள் எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்து வதற்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை தேவைப்படாது. பாராளுமன்றத்தில் பெரும் பான்மைப் பலத்தை நிரூபித்ததைவிட மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது அரசின் கடமையாகும். மேற்கூறியவற்றை அரசாங்கம் செய்தால் எதிர்கட்சியினரின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியும். மக்களின் ஆதரவும் அரசாங்கத்திற்கு கிடைக்கும்.

# கடந்த வாரத்தில்

**23.07.2004-28.07.2004**

## 23.

★பாக்தாத்தில் எகிப்திய இராஜதந்திரி கடத்திச் செல்லப்பட்டார்.



கடத்தப்பட்ட ஒருவரின் மனைவி

★பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பை ராவல்பிண்டியில் உள்ள அவரது வீட்டில் வைத்து இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங் சந்தித்து காஷ்மீர் உட்பட முக்கிய பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடினார்.

★பொஸ்னியாவில் முஸ்லிம் சமூகத்தினரையும், குரோஷிமா இனத்தவரையும் இணைக்கும் பாலம் 11 ஆண்டு இடைவெளிக்குப்பின் திறந்துவைப்பு.



இணைக்கும் பாலம்

★துருக்கியின் அங்காரா நகரிலிருந்து இஸ்தான்புறாவ் நகர் நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் ரயில் தடம் புரண்டதில் 139 பேர் பலி. நூற்றுக்குமேல் காயம்.

★பலூஜா நகரில் அமெரிக்க வான்படையினா நடத்திய தாக்குதலில் சிறுவர்கள் உட்பட ஐந்து பொது மக்கள் காயமடைந்தனர்.



வான்படை தாக்குதலில்

## 25



ஹெலி தாக்கிக் காயம்

★காஸாவில் இஸ்ரேலிய ஹெலிகொப்ரர்கள் ஏவுகணைத் தாக்குதல் நடத்தின.

இந்தியாவில் கர்நாடக மாநிலத்தில் உலகத் தமிழர் மாநாடு உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனநதனின் குத்து விளக்கேற்றலுடன் ஆரம்பமானது.

★பாக்தாத்தில்உள்ள அல்றோரா என்ற இடத்தில் வைத்து சதாம் ஆட்சிக்காலத்தில் இராணுவ அதிகாரியாக இருந்த பிரிகேடியர் காலிதாவு அவரது மகள் ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

★காஷ்மீரில் பராமுல்லா மாவட்டத்தில் இடம் பெற்ற கிரனைட் தாக்குதலில் நான்கு பொது மக்கள் பலி.

★டில்லியில் உளவு வேலை பார்த்ததாக பாகிஸ்தானைச் சேர்ந்த ருலாம் முஸ்பாவை பொலிஸார் கைது செய்தனர்.

## 26.

★துருக்கியின் மேற்குப் பகுதியில் ரெயில்வே கடவையை கடந்துசெல்லும் போது பஸ் மீது அதி வேக ரயில் மோதியதில் பஸ்சில் இருந்த பயணிகள் 15பேர் பலி.

★ஈராக் தீவிராவாதிகள் ஜோர்தானைச் சேர்ந்த இரண்டு சாரதிகளைக் கடத்திச் சென்றனர்.

★ஹொங்கோவில் அமைதிப் பணியில் ஈடுபட ஐ.நா.வின் வேண்டுகோளை ஏற்று 243 வீரர்கள் கொண்டஇந்திய விமானப் படைப் பிரிவு புறப்பட்டுச் சென்றது.

## 27.

★இந்திய நிர்வாகத்திற்கு உட்பட்ட காஸ்மீரில் டால்ஏரிப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் 4 படையினர் உட்பட 7பேர் பலி.

## 28.

★பாக்தாத்தின் வடக்கே கக்குபா நகரில் பொலிஸ்நிலையம் ஒன்றிற்கு வெளியே காவல்துறையில் இணைவதற்கு நின்றோர் மீது நடத்தப்பட்ட கார்க்குண்டுத் தாக்கு தலில 70 பேர் உடல் சிதறிப்பலி. பலர் படுகாயம்.



பொலிஸ்நிலையக் குண்டுவெடிப்பில்

★பாகிஸ்தானில் ஆப்கான் எல்லையருகே உள்ள தலைநகர் வானாவில் உள்ள வானொலி நிலையத்தில் 2 குண்டுகள் வெடித்ததில் வானொலி நிலையம் சேதம்.

# 29 ஆவது சரத்து பேணப்பட்டிருப்பின் பௌத்த மதத்திற்கு முதன்மை கிடைத்திராது

## - இருநாள் பட்டறையில் சட்டத்தரணி சிவபாலன்

(திருகோணமலை)

முதலாவது அரசமைப்பில் இடம்பெற்ற 29 ஆவது சரத்து மூலம் அனைத்து இனங்கள், மதங்களின் சமத்துவம் உறுதிப்படுத்தப் பட்டிருந்தது. அந்த 29 ஆவது சரத்து தொடர்ந்து பேணப்பட்டிருப்பின் பின்னர் கொண்டு வரப் பட்ட 1972,1978 அரசமைப்பு மூலம பௌத்த மதத்துக்கு முதல் இடம் கொடுக்கப்பட்டிருக்க முடியாது என்று மனித உரிமை ஆர்வலரான சட்டத்தரணி கா.சிவபாலன், சிறுபான்மை உரிமைகள் தொடர்பான இரு நாள் பட்டறையின் அங்குரார்ப்பண நிகழ்வில் பேசும் போது தெரிவித்தார்.

இந்த இருநாள் பட்டறை கடந்த புதன் கிழமை நிறைவு பெற்றது. திருகோணமலை சமூகசேவை நிலையத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள்,அரச திணைக்களங்கள், சமூக நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் மாணவர்களும் ஆசிரியர்களும் பங்குபற்றினா.

திருமலை மாவட்ட சமூக பாதுகாப்பு வலையமைப்பு, கொழும்பு மனித உரிமைகள் ஒன்றியம் ஊடாக முரண்பாடு மற்றும் இன ஆய்வு நிறுவனம் வழங்கிய நிதி உதவியை கொண்டு இப்பட்டறை நடத்தப்பட்டது.

மனிதாபிமான நிறுவனங்களின் ஒன்றியத்தின் திருமலை மாவட்ட அதிகாரி வி.கலைச்செல்வன் தனது வரவேற்புரையில், மனித உரிமைகள் தொடர்பான பட்டறை மாதமொருமுறை நடத்தப்பட்டு வருகிறது என்று கூறினார். சட்டத்தரணி சிவபாலன் தொடர்ந்து பேசும்போது "84 சதவீத இந்துக்கள் வாழும் இந்தியாவில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்தவர்கள் சனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளை வகித்து வருகின்றனர். பெரும்பான்மையின இந்துக்களின் பிரதிநிதிகள் எவரும் முக்கிய பதவிகளில் இல்லை. இதனை மதசார்பின்மை மற்றும் மனித உரிமை பேணலுக்கு முன்னுதாரணமாகக் கொள்ள முடியும்" என்று கூறினார்.

திருகோணமலை மாவட்ட அரசசார்பற்ற ஒன்றியத்தின் தலைவர் து.தவசிலிங்கம் பேசுகையில் யுத்தநிறுத்தம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு மனித உரிமை மீறல் வடக்கு கிழக்கில் மோசமானதாகக் காணப்பட்டது.. இப்போதும் காணப்படுகிறது. ஆனால் மனிதவுரிமை மீறல் சம்பவங்கள் குறைந்த எண்ணிக்கையில் தான் அறிவிக்கப்படுகின்றது. இதற்கு சிவில் சமூக அமைப்புக்கள் பங்களிப்பு முக்கியமானது என்று தெரிவித்தார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் திருமலை மாவட்டக்கிளைத் தலைவர் டாக்டர் இ.ஞானகுணாளன், மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் எல்.இளங்கோவன் ஆகியோரும் உரையாற்றினர். மனித உரிமைப்பட்டறையை இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் திருகோணமலைப் பிராந்திய இணைப்பாளர் திருமதி வி.மதியாபரணம், சட்டத்தரணி ரி.கரிகாலன், மனித உரிமை ஆணைக்குழுவின் திருமலைத்திட்ட அதிகாரி ஆர்.மணிவண்ணன், சகவாழ்வு மைய திருமலை மாவட்ட இணைப்பாளர் வி.ஜெய முருகன், எஹெட் அமைப்பில் முரண்பாட்டு முகாமைத்துவப் பயிற்றுவிப்பாளராகப் பணிபுரியும் எஸ்.எட்வின் ராஜ்குமார் ஆகியோர் நடத்தினர். (25)

# கிளி.கல்வி இளமாணி 2 ஆவது தொகுதி ஆசிரிய மாணவர் கற்கைநெறி ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட ஆசிரிய மாணவர்களுக்கான கல்வி இளமாணி 2 ஆவது தொகுதி கற்கை நெறியின் ஆரம்ப விழா நேற்று கிளி.கல்வி வளநிலைய மண்டபத்தில் நடைபெற்றது.இரண்டாம் வருட ஆசிரிய மாணவன் சி.பாலகிருஸ்ணன் தலைமையில் நேற்று பகல் 10.00 மணிக்கு நடைபெற்ற இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேசியக் கல்வி நிறுவனப் பணிப்பாளர்களில் ஒருவரான திருமதி சிதம்பரநாதன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம், சிரேஸ்ட விரிவுரையாளர்கள் க.சின்னராசா, திருமதி. தேவகி விரிவுரையாளர்கள் முருகவேள், சிவநேசர் திருமதி இதயசிவதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கருத்துரைகளையடுத்து கல்வி இளமாணி 1 ஆவது ஆண்டில் திறமைச் சித்தியெய்திய ஆசிரிய மாணவி திருமதி நளாயினிக்கு நிகழ்வில் கிளி. வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் பரிசில் வழங்கிக் கௌரவித்தார்.

நிகழ்வில் முதலாவது இரண்டாவது தொகுதி மாணவர்கள் பெருமளவில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# கிளி.வலய பாடசாலைகளுக்கிடையேயான தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டிகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சிக் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டி நேற்று கிளி.மகாவித்தியாலயத்திலும் கிளி. மத்திய கல்லூரியிலும் நடைபெற்றது.

கிளி. மகாவித்தியாலயத்தில் மாணவமாணவிகளின் இசை, நடன,நாடகப்போட்டி நிகழ்வுகளும் கிளி மத்தியகல்லூரியில் மாணவ மாணவிகளின் நாட்டுக் கூத்து மற்றும் மொழித்திறன் போட்டிகளும் நடைபெற்றன.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றமேற்படி போட்டி நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை கிளிநொச்சி கல்விவலய அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி. தட்சணாமூர்த்தி, கிளி.மகாவித்தியாலய முதல்வர் யோகநாதன் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை விடுதலைப்புலிகளின் உறுப்பினர் யோகரட்ணம் யோகி ஏற்றிவைத்தார்.





கிளிநொச்சி மாவட்டத் தமிழ்ப் பாட விதான உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.அமிர்தலிங்கம் தலைமையில் மேற்படி தமிழ்மொழிக் கலைத்திறன் போட்டி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# - விகாரையில் வைத்து பிக்கு -

# சிறுமி மீது பாலியல் துஷ்பிரயோகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

பதின்மூன்று வயதுச்சிறுமி ஒருவரைப் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கியதாக பௌத்த பிக்கு ஒருவர் மீது குற்றஞ்சாட்டப் பட்டுள்ளது.

நுகேகொட சிறிவிமலராம விகாரையில் கடந்த 2001ஆம் ஆண்டு மே மாதம் முதலாம் திகதி முதல் யூன் மாதம் 10ஆம் திகதி வரை குறித்த சிறுமியை பாலியல் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுத்தியதாக பெல்லன பக்னலோகதேரர் என்ற பிக்குவின் மீதே குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான வழக்கு நேற்று முன்தினம் கொழும்பு உயர்நீதி மன்றத்தில் நடைபெற்றுள்ளது.

# சிறிலங்கா நீதிபதிகளுக்கு வெளிநாடுகளில் பயிற்சி

## நீதிச்சேவை ஆணைக்குழு தீர்மானம்

சிறிலங்கா நீதிபதிகளுக்கு வெளிநாடுகளில் பயிற்சியளிக்க நீதிச் சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

30 நீதிபதிகளைக் கொண்ட குழுவினர் முதலாவதாக ஹொங்கொங் பல்கலைக் கழகத்திற்குச் செல்லவுள்ளனர். இவர்கள் செப்ரெம்பர் மாதம் இலங்கையில் இருந்து புறப்பட்டுச் செல்லவுள்ளனர். நீதிமன்ற விசாரணை நடவடிக்கைகளில் நவீன வழிமுறைகளை மேற்கொள்வதும், உயர் தொழில் நுட்பத்தைப் புகுத்துவதும் இப்பயிற்சிகளின் நோக்கமாகும். டிசம்பர் மாதத்தில் இரண்டாவது குழுவினர் இலங்கையில் இருந்து புறப்படவுள்ளனர் என்றும் நீதிச் சேவைகள் ஆணைக் குழுவின் தலைவர் ரங்கராஜ் ஜயதிலக கூறியுள்ளார். இலங்கையின் நீதித்துறை நடவடிக்கைகளை முழு அளவில் தனிமயமாக்கும் நடவடிக்கைகளுக்கு முன்னோடியாக இப் பயிற்சி நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

# கண்டியில் பொலிஸ் அதிகாரியின் உந்துருளி தீக்கிரை

(கொழும்பு)

பொலிஸ் உத்தியோகத்தரின் உந்துருளி இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டது.

கண்டி பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த அப் பொலிஸ் உத்தியோகத்தர் பாதுகாப்பு நிலையத்தில் தனது உந்துருளியை நிறுத்திவிட்டு நிலையத்திற்குள் சென்றிருந்த சமயம் இனந்தெரியாத சிலர் அவ் உந்துருளியை தீக்கிரையாக்கி அழித்துள்ளனர்.

இது ஒரு நாச வேலையாக இருக்கலாம் என சந்தேகிக்கும் கண்டிப் பொலிசார் விசாரணைகளைத் தொடர்கின்றனர்.

# கப்பல் தீ விபத்தில் இறந்த 4 பேரின் சடலங்கள் மீட்பு

(கொழும்பு)

காலித்துறைமுகத்திற்கு அருகிலே கப்பல் ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்த ஆறு பேரில் நால்வரின் சடலங்கள் மீட்கப் பட்டுள்ளன.

காலித்துறைமுகப் பொலிசாரும், கடற்படைச் சுழியோடிகளும் இணைந்து இந்த நான்கு வெளிநாட்டவர்களின் சடலங்களையும் மீட்டுள்ளனர்.

இச்சடலங்கள் பிரேத பரிசோதனையின் பின் கொழும்பு வந்திருக்கும் அவர்களின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை சேதமடைந்த கப்பலை சிங்கப்பூருக்குக் கொண்டு செல்வதற்காக அதன் உரிமையாளர்களின் பிரதிநிதிகளும் சிறிலங்காவிற்கு வந்திருப்பதாக ஆங்கில நாளிதழின் செய்தி யொன்று கூறுகின்றது.

## பதவி விலகல்

சிறிலங்கா ரெலிக்கொமின் தலைமை பொறுப்பிலிருந்து தான் விலக்கிக்கொள்வதாக திலங்க சுமதிபால அறிவித்துள்ளர். கடந்த வியாழனன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மகாநாட்டில் கருத்து வெளியிட்ட திலங்க சுமதிபால பல்வேறு சவால்களின் மத்தியில் ரெலிக்கொம் நிறுவனத்தை முன்மாதிரி அமைப்பாக உயர்த்தியதாக குறிப்பிட்டார். தொடர்ந்து பதவியேற்கும் தலைவர் ரெலிக்கொம் நிறுவனத்தை முன்னேற்றகரமான பாதையில் கொண்டு செல்வதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும்என வேண்டுகோள் விடுத்த திலங்க சுமதிபால 4 வருடங்களுக்கு மேலாக சமயா சமய ஊழியர்களாக பணிபுரியும் அனைவரும் நிரந்தர ஊழியர் களாக்கப்படுவார்கள் என்றும் கூறினார். (32)

# சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்க்க நடவடிக்கை

சிறிலங்கா இராணுவத்திற்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கை இன்று முதல் நடைபெறவுள்ளது.18 வயதுக்கும, 25 வயதுக்கும் இடைப்பட்டோர் இதன்போது இணையலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது. இவ் ஆட்சேர்ப்பு நடவடிக்கை எதிர்வரும 16ஆம் திகதிவரை கண்டி இராணுவ முகாமில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# மனித உரிமைகள் தொடர்பாக மாணவரிடையே கட்டுரைப்போட்டி

எதிர்வரும் டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி கொண்டாடப்படும் சர்வ தேச மனித உரிமைகள் தினத்தை யொட்டி 'பவ்ரல்' அமைப்பு நாடளாவிய ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப் போட்டி யொன்றினை நடாத்தவுள்ளது. மனித உரிமைகள் தொடர்பான அறிவை மாணவரிடைய விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டு நடாத்தப்படவுள்ள இப்போட்டி மாவட்ட மற்றும் தேசிய மட்டங் களில் நடைபெறும் க.பொ.த.உயர்தர மற்றும் சாதாரண மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்ற முடியும். சிரேஷ்ட பிரிவிற்கு "மனித உரிமைகள் சனநாயகத்தின் அடிப்படை அம்சம்" என்ற தலைப்பும், கனிஷ்ட பிரிவிற்கு "மனித உரிமைகளை பாதுகாப்பதன் முக்கியத்துவம்" என்ற தலைப்பும் கட்டுரைக்காக கொடுக்கப்பட்டுள்ளன. ஆயிரம் தொடக்கம் 1250 வரையான சொற்கள் கொண்டதாக கட்டுரை அமையவேண்டும் எனவும் தமிழ், சிங்களம், ஆங்கிலம் என்பவற்றில் எம்மொழியிலும் கட்டுரை எழுதப் படலாம் என்றும், கட்டுரைகள் எதிர் வரும் ஒக்ரோபர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் 'பவ்ரல்' அமைப்பு இல. 93/10, துட்டகெமுனு வீதி- கொழும்பு-6 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப் படல் வேண்டும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.


வன்னி நெட் கபே
Vanni Net Cafe
உங்கள் அலுவலகத்திற்கு / வீட்டிற்கு வருகின்றது
- நினைத்த நேரத்தில் இன்டநெட் ஈ-மெயில் பாவிக்கும் வசதி.
- 24மணி நேர இணைப்பு.
- சிறந்த பாராமரிப்பு, திருத்த சேவை.
- வேகம் 64 Kbps, 128Kbps, 256 Kbps, 1MB, 2 MB.
- வாகனங்களில் பயன்படுத்தக்கூடிய விஷேட அன்ரனாக்கள் மூலம் பயணங்களின் போது இன்ரநெட் பாவனை.
- நகரைச் சுற்றி 5K.M சுற்றளவிற்கு நடமாடும் இன்ரநெட் வசதி.

அரச அலுவலகங்கள், அரச சார்பற்ற, சர்வதேச(NGO,INGO), தனியார் நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்




கணினி மையம்
TCC
யாழ் சாலை, கிளிநொச்சி (கந்தசாமி கோயிலுக்கு அருகில்)








பட்டமளிப்பு விழா-2004
வன்னி தொழில்நுட்பவியல் நிறுவகம்

இடம் :கலாச்சார மண்டபம்
A9 பிரதான சாலை,
டிப்போச்சந்தி, கிளிநொச்சி
காலம் :08 ஓகஸ்ட் 2004
நேரம் :காலை 10.30 மணி
பிரதம விருந்தினர் :பேராசிரியர் S.மோகனதாஸ்,
துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

மேற்படி நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ள 2003/2004 கல்வியாண்டில் பாடநெறிகளை பூர்த்தி செய்த பட்டதாரிகள் உடனடியாக நேரிலோ அன்றி தொலைபேசி இலக்கம் 021228-5875 இன் ஊடாகவோ அன்றி மின்னஞ்சல் Registrar@vanni.org இன் ஊடாகவோ பதிவாளருடன் தொடர்பு கொள்வதுடன் உங்களுக்குரிய பதிவினையும் உறுதிப்படுத்திக் கொள்ளவும்

(4864) நிர்வாகம்



௧ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 1974 - 05 - 21



வீரச்சாவு 2003 - 08 - 13

மேஜர் கருவேலன்
(அருள்ராஜ்)

ஓராண்டு போனதய்யா
நீங்கள் எம்மைவிட்டு பிரிந்து
நூற்றாண்டு போனாலும் நீங்காது
உங்கள் நினைவு.

நிரந்தர முகவரி- அப்புஸ்தன்னை

தற்காலிக முகவரி-
7ஆம் வட்டாரம்,
ஆனந்தபுரம், புதுக்குடியிருப்பு.

தகவல்-
அ.ஜெயந்தா
குடும்பத்தினர்.

(9172)



௨ஆம் வருட நினைவஞ்சலி

பிறப்பு 11 - 12 - 1927



இறப்பு 26 - 07 - 2002

சின்னையா பொன்னம்பலம்
திதி-02.08.2004

பாசத்தின் பிறப்பிடமாய்
அன்பின் இருப்பிடமாய்
விளங்கிய எம் தெய்வமே
ஈராண்டு சென்றாலும்
மறவாது உங்கள் நினைவு
எம் நெஞ்சை விட்டு

முகவரி:-
05ஆம் வாய்க்கால்,
கிளிநொச்சி.

தகவல்
குடும்பத்தினர்

(4861)

# இந்தியர் மூவர் உட்பட ஏழு பேரை விடுவிக்க ஈராக்கிலிருந்து குவைத் நிறுவனம் வெளியேறியது

## - ஏனைய கோரிக்கைகளை ஏற்கப்பின்னடிப்பு

ஈராக்கிலுள்ள குவைத் நிறுவனம் ஈராக்கைவிட்டு வெளியேறியுள்ளது மூன்று இந்தியர்கள் உட்பட ஏழு பேரை பணயக் கைதிகளாகக் கடத்திச் சென்ற ஈராக்கிய கறுப்புக் கொடி தீவிரவாதிகள் ஈராக்கிலிருந்து குவைத் நிறுவனம் வெளியேற வேண்டும் இல்லையேல் பணயக்கைதிகளை கொன்று விடப்போவதாக எச்சரிக்கை செய்திருந்தனர்.

இந்நிலையில் குவைத் நிறுவனம் ஈராக்கைவிட்டு வெளியேறியுள்ளது ஆனால் அமெரிக்க தாக்குதலில் கொல்லப்பட்ட ஈராக்கியர்களுக்கு குவைத் நிறுவனம் இழப்பிடு வழங்க வேண்டும் எனும் கோரிக்கையை நிறைவேற்ற பின்நிற்பதாகக் கூறப்படுகிறது.

பிணைக்கைதிகள் ஏழுபேரும் உடல் ஆரோக்கியத்துடன் இருக்கின்றார்களா என்பதை நேரில் பார்த்த பின்னரே தீவிரவாதிகளின் மற்றைய கோரிக்கைகளை நிறைவேற்ற முடியும் என்று குவைத் நிறுவனம் வலியுறுத்தியுள்ளது.

பிணைக்கைதிகளை வேலைக்கு அமர்த்திய குவைத் நிறுவனம் ஈராக்கிலிருந்து ஒதுங்கி இருக்க ஒப்புக்கொண்டுள்ளதாக ஈராக்கிய மத்தியஸ்தர் ஷேக்துல் யாணி கூறியுள்ளார்.



ஈராக்கிய தீவிரவாதிகளால் மூன்று இந்திய வாசிகள் பணயக் கைதிகளாக பிடித்து வைத்திருப்பதை கண்டித்து வீதிமறியலில் ஈடுபட்டுள்ள இந்தியாவின் உனா கிராம வாசிகள்.

# தனியார், தாராள மயமாக்கலில் அவசரம் காட்டக் கூடாது

## - இந்தியாவுக்கு எச்சரிக்கை

தனியார் மயமாக்கலிலும் தாராளமயமாக்கலிலும் அவசரம் கூடாது என்று இந்தியாவை சர்வதேச செலாவணி நிதியம் எச்சரிக்கை செய்துள்ளது. தாராளமயமாக்கலில் தென்னாபிரிக்க நாடுகள் செய்த தவறுகளை தவிர்த்த பின்னரே ஏழு சதவீத பொருளாதார வளர்ச்சியை இந்தியா அடைய முடியும் என்று சர்வதேச செலாவணி நிதியத்தின் ஆய்வாளர் அரவிந் சுப்பிரமணியமும், கலோட்பல்கலைக்கழகப் பேராசிரியர் டானிட்டும் சேர்ந்து நடத்திய ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கட்டமைப்பு துறைகளில் தனியார் மயப்படுத்துவது தொழிலாளர் சந்தை சீர்திருத்தமும் மூலதன கட்டுப்பாடுகளை தளர்த்துவதும் மிக விரைவாகவும், விரிவாகவும் நடைபெற வேண்டுமென்று பல பொருளாதார நிபுணர்கள் அவசரம் காட்டுகின்றனர். ஆனால் இதனால் ஏற்படக்கூடிய சமூக ஏற்றத் தாழ்வுகளையும் பாதிப்பையும், விநியோக ஏற்றத்தாழ்வுகளையும் கணிக்க வேண்டுமென்று ஆய்வுக் குழு கூறுகின்றது.

என்றாலும் இந்தியாவில் சீர்திருத்ங்கள் நெருக்கடியிலிருந்து மீண்டு விட்டன. இனி சரிவு ஏற்படாது என்று அக்குழு கூறியுள்ளது.

# தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளை அழைத்து வருவது குறித்துப் பேச்சு

தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளை தமது சொந்த நாட்டிற்குஅழைத்து வர இராமேஸ்வரத்திற்கும், தலைமன்னாருக்குமிடையே படகுச் சேவை ஆரம்பிப்பது பற்றி அகதிகளுக்கான ஐநா உயர்ஸ்தானிகராலயம் இலங்கை-இந்திய அரசுகளுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறது.

2003 ஆம் ஆண்டு 971 குடும்பங்களும் இவ்வருடம் இதுவரை 1500 குடும்பங்களும் தாயகம் திரும்பியுள்ளன. இவ்வழிப்பயணத்தின் போது மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாகவும், இதற்குத் தீர்வு காணும் வகையில் தனியார் படகுகளின் உதவியுடன் இராமேஸ் வரம்-தலைமன்னாருக்கிடையே படகுச் சேவையை ஆரம்பிக்கலாமெனவும் அகதிகளுக்கான ஐநா உயர் ஸ்தானிகராலயத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுசம்பந்தமாக யு.என்.எச்.சி.ஆர் இந்திய இலங்கை அரசுகளுடன் பேசியதாகத்தெ தரிவிக்கப்படுகிறது.

# வீட்டுப்பணிப் பெண்ணாக பாரெயின் சென்றவர் மரணம்

(கொழும்பு)

பாரெயினில் வீட்டுப்பணிப் பெண்ணாகச் சென்ற இளம் தமிழ் யுவதியொருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த எட்டுத் தினங்களுக்கு முன்னர் பாரெயினுக்கு வந்திருந்த சிவரஞ்சினி நாகலிங்கம் (வயது-22) என்ற இந்த யுவதி கிருமித் தொற்றுக்கு இலக்காகி சல்மானியா மருத்துவ மனையில் உயிரிழந்துள்ளார். மேற்படி மருத்துவமனையின் பிரேத அறையில் யுவதியின் சடலம் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக விபரங்கள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை எனவும் ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

# தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பை ஏற்க பாரதீயஜனதா மறுக்கிறது

## - தி.மு.க தலைவர் கருணாநிதி குற்றச்சாட்டு

தேர்தலில் மக்கள் அளித்த தீர்ப்பிணை ஏற்றுக்கொள்ளவேண்டியது தான். ஜனனாயக பன்பு ஆகும் ஆனால் மத்தியரவிக்கு பாரதிய ஜனதா கட்சி தினமும் இடையூறுகள் ஏற்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றது என்று தி.மு.கதலைவர் கருணாநிதி கூறியுள்ளர். நேற்று முன்தினம் சென்னையில் கூட்ட மொன்றில் பேசிய அவர் பாராளுமன்றத்தில் கூச்சல் குழப்பம், பாராளுமன்றக் குழுக்கள் புறக்கணிப்பு தொடர்பாகக் கூறியுள்ளர்.

# வரட்சி மாநிலங்களில் தமிழகத்தின் பெயர் அறிவிப்பதற்குப் போதிய தகவல்களில்லை

## - மத்திய நிதியமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

வரட்சியால் பாதிக்கப்பட்ட மாநிலங்கள் பட்டியலில் தமிழ் நாட்டையும் சேர்ப்பதற்கு மத்தியரமைச்சரவையில் இடம் பெற்றுள்ள தமிழ் நாட்டைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் முயற்சி எதுவும் எடுக்கவில்லை எனும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டை மத்திய நிதியமைச்சர் சிதம்பரம் மறுத்துள்ளார்.

பொள்ளாச்சியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழ் நாட்டை வரட்சி பாதித்த மாநிலமாக அறிவிக்க வேண்டுமா?...... என்பது பற்றி கருத்துக் கூறிய அவர் அதற்கு தமக்குப் போதுமான தகவல்கள் இல்லை என்று கூறியுள்ளார். மத்திய வேளாண்மை அமைச்சர்தான் இது பற்றிக் கூற வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.


# இலங்கை அரசு வடக்கு கிழக்கு

### மாகாணம் வடக்குக்கிழக்கு துரித மீளமைப்புத் திட்டம் கடன் இல 2880சி.இ.(CE)
### தேசிய போட்டிக் கூறுவிலை கோரல் நிர்மாண வேலைகள்

## கேள்வி அறிவித்தல் ஐ.எவ்.பி (I.F.P)

ஐ.எப்.பி.இல கிளி/ நீர்ப்/18 திகதி 02.08.2004

01.வடக்குக் கிழக்கு துரித மீளமைப்புத் திட்டத்தின் ஆகு செலவு சார்பாக சர்வதேச அபிவிருத்தி அமைப்பிலிருந்து கடனொன்றை இலங்கை அரசு பெற்றுள்ளது. கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் ஒரு பகுதியை பிரயோகிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கு இலங்கை உட்பட சகல நிதியிடும் நாடுகளைச் சேர்ந்த தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடம் இருந்து பின்வரும் வரையறுக்கப்பட்ட வழிகாட்டலின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஐ.பி.ஆர்.டி. (I.B.R.D) கடன் வசதி, ஐ. டி.ஏ.(I.D.A) நம்பிக்கையின் கீழான வசதி.

02.அரசாங்க அதிபர், கிளிநொச்சி இலங்கை அவர்களால் மூடிய கேள்விகள் தகுதியான ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து பின்வரும் கட்டடத் தொகுதி நிர்மாணிப்பதற்கு கோரப்படுகின்றன.

03கீழே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகவோ அல்லது கிளிநொச்சியில் மாற்றத்தக்கதான அரசாங்க அதிபர் கிளிநொச்சி என்ற பெயரில் அங்கீகரிக்கப்பட்ட வங்கியில் பெறப்பட்ட வங்கி ஆணையாகவோ (Draft) சமர்ப்பிப்பதன் பேரில் பிரதம எந்திரி, மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி அவர்களிடமிருந்து 06.09.2004 ஆம் திகதி பிற்பகல் 03.00 மணிவரை கேள்விப் பொதிக்கானகேள்வி ஆவணங்களின் இரு பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

04ஆர்வமுள்ள தகுதியான கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்களை பிரதம எந்திரி மாகாண கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சியில் இலவசமாகப் பார்வையிடு வதோடு மேலதிக விபரங்களையும் பின்வரும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம எந்திரி
மாகாண கட்டடங்கள் திணைக்களம்
கிளிநொச்சி

05. சமர்ப்பிக்கப்படும் கேள்விகள், கேள்விகள் திறக்கப்படும் தினத்திலிருந்து 45 நாட்களுக்குச் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் அரசாங்க அதிபர் கிளிநொச்சி என்ற பெயரில் எடுக்கப்பட்ட கேள்விப்பிணையும் கேள்விகளுடன் இணைக்கப்படும் பின்வரும் முகவரிக்கு 07.09.2004 பிற்பகல் 03.00 மணிக்கு முன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

தலைவர்
கேள்விச்சபை
மாவட்டச் செயலகம்
கிளிநொச்சி

அதே தினம் பிற்பகல் 03.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரின் பிரதிநிதி விரும்பின் சமுகமளிக்கலாம். மேற்குறிப்பிட்ட திகதியில் காரியாலயம் மூடப்பட வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படின் அதற்கு அடுத்த வேலை நாளன்று அதே இடத்தில் அதே நேரத்தில் கோரல்கள் பெறப்பட்டு திறக்கப்படும்.

06.வேறு விபரங்களை கேள்விகள் ஆவணங்களில் பார்வையிடலாம்.

| கேள்வி குறியீட்டு இல | வேலை விபரம் | கேள்விப் பிணை | கேள்வி ஆவணங் களின் பெறுமதி | வேலை நிறை வேற்ற வேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| கிளி/நீர்ப்/பி.பொ/18 | சுற்றுலா விடுதி மீள் நிர்மாணம் கட்டடங்கள் திணைக்களம், கிளிநொச்சி | 25,000/= | 1,000/= | 02 மாதங்கள் |

07. கேள்விதாரர்கள் கேள்விதாரர்களுக்கான செயற்பிரமாணக் குறிப்புகள் 04 பந்தியில் சொல்லப்பட்ட நடைமுறைகளை ஆகக்குறைந்த தகைமைகளாகக் கொண்டிருத்தல் வேண்டுமென இத்தால் ஆலோசனை வழங்கப்படுகின்றது. இந்தக் கேள்வி விளம்பரத்தில் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை வழங்கும் போது கேள்விதாரர் இவ் வேலைகளை நிறைவேற்றுவதற்குரிய வளமும், ஆளணியும் அனுபவமும் இருப்பது ஒரு தனி ஒப்பந்தத்திற்கு தேவைப்படும் தகைமையைத் திருப்திப்படுத்துவதாக இருத்தல் வேண்டும்.

அரசாங்க அதிபர்,
மாவட்ட செயலகம்.
கிளிநொச்சி.

(சி.10049)








# ஆசியக் கிரிக்கெட் கோப்பையை சிறிலங்கா அணி வென்றது!










## தொடர் ஆட்ட நாயகனாக சனத் ஜெயசூரிய தெரிவு

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆசியக் கோப்பைக்கான கிரிக்கெட் இறுதியாட்டத்தில் இந்திய அணியை 25 ஓட்டங்களால் தோற்கடித்து ஆசியக் கோப்பையை சிறிலங்கா அணி கைப்பற்றியுள்ளது.

பகல் இரவு ஆட்டமாக நடைபெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சிறிலங்கா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

50 ஓவர்கள் முடிவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது சிறிலங்கா அணி.

இதில் சிறிலங்கா அணித் தலைவர் மாவன் அத்தப்பத்து, சங்கக்கார ஆகியோர் அரைச்சதங்களைப் பெற்று தமது அணிக்கு வலுச் சேர்த்தனர்.




பந்து வீச்சில் சச்சின் டெண்டுல்கர், இர்பான் பதான் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களை மட்டுமேபெற முடிந்தது. சச்சின் டெண்டுல்கர் 74 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் உபுல் சந்தன 33 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், ஜெயசூரிய இரு விக்கெட்டுக்களையும், டில்சான், வாஸ், சொய்ஸா தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இதேவேளை, அதிக ஓட்டங்களை விட்டுக்கொடுத்த முரளியினால் விக்கெட் எதனையும் கைப்பற்ற முடியவில்லை.

இத்தொடரின் சிறப்பாட்டக்காரர் விருதினை சனத் ஜெயசூரியாவும், இறுதிப் போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருதினை மாவன் அத்தப் பத்துவும் பெற்றுக் கொண்டனர்.

இறுதிப் போட்டியின் சிறந்த இணைப்பாட்டமான 116 ஓட்டங்களைப் பெற்ற மாவன் அத் தப் பத்து - சங்கக் கார சோடிக்கு பணப் பரிசில் வழங்கப்பட்டது.




நேற்றைய போட்டிக்கு பிரதம விருந்தினராக வருகை தந்திருந்த சிறிலங்கா பிரதமர் மகிந்த ராஜ பக்ஷ சிறிலங்கா அணிக்கு வெற்றிக் கோப்பையை வழங்கினார்.




## ஸ்கந்தா அணி சம்பியனானது

(கிளிநொச்சி)

உழவர் ஒன்றிய விளையாட்டுக் கழகம் நடத்திய அமரர் இராசகதிரவேலு பத்மேஸ்வரன் (சிவா) ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான ஒன்பது பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் ஸ்கந்தா அணி வெற்றிபெற்றது.

இறுதிப் போட்டியில் ஸ்கந்தரபுரம் ஸ்கந்தா விளையாட்டுக் கழகத்தினை எதிர்த்து பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் தண்ட உதை மூலம் 3-0 என்ற கோல் கணக்கில் ஸ்கந்தா அணி வெற்றி பெற்றது. 3ஆம் இடத்திற்கான பரிசினை பளை சோலை விளையாட்டுக்கழகம் பெற்றுக் கொண்டது.

சிறந்த விளையாட்டு வீரராக ஜொலி போய்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜெயக்குமாரும், சிறந்த கோல் காப்பாளராக சோலை விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கீரனும் தெரிவு செய்யப்பட்டனர். சிறந்த அணிக்குரிய பரிசினை உருத்திரபுரம் விளை யாட்டுக்கழக 'பி' அணி பெற்றுக் கொண் டது.

பிரதமவிருந்தினராக கிளி. மாவட்ட விளையாட்டு அதிகாரி சு. கனகராசா அவர்களும், சிறப்பு விருந்தினராக கிளி. மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா அவர்களும் கலந்து கொண்டனர்.

முதலாம் இடத்தினைப் பெற்ற அணிக்குரிய பரிசினை அமரர் இராசகதிரவேலு பத்மேஸ் வரனின் (சிவா) தாயார் வழங்கிக் கௌரவித்தார்.

## உடும்பே மீதான விசாரணை முடிவிற்கு வந்தது

சூதாட்டக்காரர் ஒருவருடன் தொடர்பு வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட கென்ய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மீது நடத்தப்பட்டு வந்த விசாரணை முடிவுக்கு வந்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

இவர் மீது எவ்வித குற்றமுமில்லை என கென்ய வழக்கறிஞர் இஷான் கபில வெள்ளியன்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக சர்வதேச கிரிக்கெட் சபையினதும், கென்ய கிரிக்கெட் சபையினதும் பதில் அதிகாரிகளாக கடமையாற்றும் கமாவ் கரோரி, உடுப்பே இந்தியாவிலுள்ள சூதாட்டக்காரருடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் அவருக்கு விளையாட்டில் பங்கு பற்ற ஆயுட்காலத் தடை அல்லது இரண்டு வருடத்தடை விதிக்க வேண்டுமெனவும் கூறியிருந்தனர்.

இதனையடுத்து விசாரணைகள் நடத்தப்பட்டு வந்து, அவர் அளித்த வாக்கு மூலம் அவரை குற்றமற்றவராக காட்டுவதாக கென்ய வழக்கறிஞர் தெரிவித்தார். எனினும் ஆவணங்கள் மூலம் இவரது குற்றம் நிரூபிக்கப்பட்டால் இவர் தண்டிக்கப்படுவார் என்றும் விசாரணைகளின் பின்னர் சிம்பாப்வே சுப்ரீம் கோட் நீதிபதி அகமது இப்ராகிம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் விசாரணையின் முடிவை சர்வதேச கிரிக்கெட் சபையிடம் (ஐ.சி.சி) அறிவிப்பதாகவும் இது அங்கு ஒத்துக் கொள்ளப் படாதவிடத்து மேலதிக முடிவை (ஐ.சி.சி) மேற்கொள்ளும் என்றும் கூறினார்.

### ஒலிம்பிக்கில் பங்கேற்கும்

## இந்திய வீரர் – வீராங்கனைகள் பயிற்சிக்கு 16 கோடி ரூபா செலவு

ஒலிம்பிக் போட்டிக்காக உள் மற்றும் வெளிநாடுகளில் இந்திய வீரர், வீராங்கனைகள் மேற்கொண்டுவரும் பயிற்சிக்கு இது வரை ரூபா 15.79 கோடி செலவிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் அரிஸோணா மாகாணத்தில் இந்திய ஹொக்கி குழு மேற்கொண்ட உடற்பயிற்சி முகாமிற்கு ரூபா 42 லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

பல்வேறு பிரிவுகளில் 16 வீரர், வீராங்கனைகள் வெளிநாடுகளில் பயிற்சிகளில் மேற்கொள்வதற்காக ரூபா 55.36 இலட்சம் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றொரு 12 வீரர்களுக்கு ரூபா 2 கோடியே 30 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. ஒலிம்பிக்கிற்கு வீரர், வீராங்கனைகளைத் தயார் படுத்தும் நோக்கில் 35 பயிற்று நர்களுக்கு ரூபா 2.50 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் தொடக்க நிழ்ச்சிக்கான கலாசார உடை, போட்டி சாதனங்கள், படகு, துடுப்புப் படகு, வாடகை, வீரர், வீராங்கனைகளுக்கான படி ஆகியவற்றக்கு ரூபா 69 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### -எதென்ஸ் செல்லும்-

## இந்திய ஒலிம்பிக் குழுவில் 46 அதிகாரிகளுக்கு இடம்!

(சென்னை)

எதென்சில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளும் இந்தியக் குழுவுடன் 46 அதிகாரிகள் செல்லவுள்ளனர். இதேவேளை பங்கு பற்றும் வீரர்-வீராங்கனைகளை எண்ணிக்கை 79 ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. முன்னதாக 14 வரையிலான போட்டிகளில் மொத்தம் 78 வீரர்-வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர் என இந்திய அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பயஸ் – பூபதி சோடி அரையிறுதிக்குத் தெரிவு



(ரொரண்டோ)

கனடாவில் இடம்பெற்றுவரும் எ.டி.பி. மாஸ்டர் டெனிஸ் போட்டியில் ஆண்கள் இரட்டையர் போட்டியில் இந்தியாவின் பயஸ் - பூபதி சோடி அரை இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

தம்மை கால் இறுதியில் எதிர்த்தாடிய அமெரிக்காவைச் சேர்ந்த டால்மெர், செக்குடியரசைச் சேர்ந்த பாவெல்விஸ்னெர் சோடியைத் தோற்கடித்து அரையிறுத்திக்குத் தெரிவானது.

முதல் செட்டில் 2-6 என்ற ரீதியில் தோல்வி கண்ட பயஸ் - பூபதி சோடி இரண்டாவது, மூன்றாவது செட்களை 7-6, 6-3 என்ற ரீதியில் வெற்றி கொண்டது.

### ரொரண்டோ மாஸ்டர் டெனிஸ்

## இறுதிப் போட்டிக்கு றோஜர் பெடரர் தெரிவு

அமெரிக்காவில் நடை பெற்று வருகின்ற ரொர..ண்டோ மாஸ்டஸ் டெனிஸ் போட்டியில் இறுதிச் சுற்றிற்க்கு முன்னணி வீரர் றோஜர் பெடரர் தகுதி பெற்றுள்ளார்.

பல்வேறு சுற்றுக்களுக்குப் பின்னர் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் றோஜர்பெடரர், சுவீடன் நாட்டைச் சேர்ந்த தோமஸ் ஜோன்சனை எதிர்த்து விளை யாடி 4-6, 6-3, 6-2 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிச் சுற்றிற்குத் தகுதி பெற்றுள்ளார். இதே போன்று சாண்டியோ கோவில் நடை பெற்று வருகின்ற டெனிஸ் போட்டியில் நேற்று முன்தினம் நடை பெற்ற அரையிறுதிப் போட்டி ஒன்றில் அமெரிக்காவைச் சேர்ந்த லிம்சி டாவன் புட் இறுதிச் சுற்றிற்குத் தகுதி பெற்றுள்ளார்.

இர் ரஷ்ய நாட்டைச்-சேர்ந்த எலினாவை எதிர்த்து விளையாடி 6-2, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிச் சுற்றிற்கு முன்னேறியுள்ளார்.

## சிந்தனைக்கு



நாம் ஒருவரையும் ஏமாற்றவும் இல்லை,துரோகம் இழைக்கவும் இல்லை. ஆனால் எம்மை யாரும் ஏமாற்றினால் அல்லது எமக்குத் துரோகம் இழைத்தால் நாம் பதிலடி கொடுக்கத் தயங்கமாட்டோம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 02-08-2004

மின் அஞ்சல்
Daily@eezhanatham.com
natham23ela@yahoo.com

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948


## புறக்கணிப்பு

பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புக்களில் வடக்கு-கிழக்கு மாகாணங்கள் புறக்கணிப்பிற்குள்ளாகியுள்ளன. அதிலும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள பட்டதாரிகள் முற்றாகப் புறக்கணிப்பிற்குள்ளாகியுள்ளனர். எடுத்துக்காட்டாக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வேலையற்ற பட்டதாரிகள் எவருக்குமே அரசாங்கம் வேலை வழங்கவில்லை.

ஏற்கனவே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் வேலை வழங்கலுக்கான நேர்முகப் பரீட்சை மற்றும் [illegible]லையற்றவர் என உறுதிப்படுத்தல் போன்றவையும் சற்றுத் தாமதமாகவே இடம் பெற்றிருந்தன. இந்நிலையில் நியமனமும் ஒருசிறு தொகுதியினருக்காவது வழங்கப்படாது இருப்பதானது திட்டமிட்ட புறக்கணிப்பாகவே சொல்லத்தக்கதாகும்.

இன்றைய காலகட்டத்தில் அதாவது தொழில் நுட்பம் பெரியளவில் வளர்ந்துள்ள நிலையில் காலதாமதமான நேர்முகப்பரீட்சை, உறுதிப்படுத்தல் போன்றவற்றால் கால தாமதம் ஏற்பட்டதாக அதாவது வேலை வழங்கப்படுவோரின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட முடியவில்லை எனக் கூறின் அது பொருத்தப்பாடான காரணியாக இருக்க மாட்டாது.

இதேவேளை, அடுத்த பட்டியலில் 12 ஆயிரம் பட்டதாரிகளுக்கு வேலை வழங்கப்படவுள்ளதாக அரச தரப்புத் தகவல் ஒன்று கூறுகின்றது. இதில் தகுதியுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் கிடைக்கப்பெறும் என யாழ். மாவட்ட அரச அதிபர் யாழ். மாவட்டப் பட்டதாரிகளுக்கு உறுதி கூறியுள்ளார்.

ஆனால் அடுத்த கட்டத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றதோ இல்லையோ ஆனால் முதலாவது பட்டியலில் வேலைவாய்ப்பு [illegible]ங்கப்படாமை அரசாங்கத்தின் மாற்றந்தாய் மனப்பான்மையின் வெளிப்பாடே ஆகும்.

இலங்கையில் உள்ள அனைத்துப் பட்டதாரிகளுக்குக்கும் குறிப்பாக வடக்கு-கிழக்கிலுள்ள அனைத்துப் பட்டதாரிகளும் உள்ளடங்கலாக அரசாங்கம் வேலை வாய்ப்பினை வழங்குவதற்கு கடப்பாடு உடையதாகும். ஏனெனில் பல்கலைக்கழகங்களையும் அரசாங்கமே நடாத்துகின்றது. இதற்கான பரீட்சைகளையும் அனுமதியையும் அரசாங்கமே வழங்குகின்றது. இந்நிலையில் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று வெளியேறுகின்றவர்களுக்கு தொழில் வழங்குதல் என்பதும், அரசாங்கத்தின் கடமையாகும்.

இந்நிலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியிலுள்ள பட்டதாரிகளுக்கு அரசாங்கம் வேலைவாய்ப்பை வழங்கத் தவறியுள்ளமையானது எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாதது. ஏனெனில் அவர்களும் இலங்கைப் பிரஜைகள் என்பதுடன் இவர்கள் சிறிலங்கா அரசின் பல்கலைக்கழகங்களில் தான் கல்வி கற்றவர்கள் ஆகும்.

இந்நிலையில் இப்பட்டதாரிகளுக்கு சில தினங்களுக்குள் ஏனைய பகுதிகளில் வழங்கப்பட்டுள்ள அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படாது போனால் இது அரசாங்கத்தின் அரசியல் ரீதியிலான புறக்கணிப்பாகவே கொள்ளத்தக்கதாகும். இதுவே உண்மையாக இருக்குமானால், சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் ஓர் இனரீதியான ஒடுக்கு முறையாகவே இது இருக்கும்.

இவ்வாறு வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வழங்கும் விடயத்திலேயே இன ரீதியிலானதும், அரசியல் ரீதியிலானதுமான வேறுபாட்டைக் காட்டவிளையும்,ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினை தொடர்பாக ஆக்கபூர்வமானதும் பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடியதுமான முயற்சிகளில் முன்னேற்றகரமான நடவடிக்கைகளைக் கைக்கொள்வார்கள் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும்.

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் பல்கலைக்கழக அனுமதியில் தமிழ் மக்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டமையும் முக்கியமானதொரு திருப்புமுனைக்கும் போராட்டங்களுக்கும் வழிவகுத்ததெனில் பட்டதாரிகளின் நியமனத்திலும் அத்தகையதொரு நிலை ஏற்படுமானால் சிறிலங்கா ஆட்சியாளர்கள் இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியதாகவேயிருக்கும். அதாவது ஏமாற்றப்பட்ட இளைஞர்களுக்கு அரசு பதில் கூறுவது தவிர்க்க முடியாததாகும்.

# தமிழர்களை அழிப்பதில் சிறி.புலனாய்வுத்துறைக்கு துரும்புச்சீட்டாகப் பயன்பட்டவர் புளொட் மோகன்

## -பா.உறுப்பினர் ரவிராஜ்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலை வரலாற்றிலும் சரி, சாமானியத் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டதிலும் சரி, கந்தையா யோகராசா என்ற புளொட் மோகன் முக்கியமானவர் என பாராளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான நடராஜா ரவிராஜ் அவர்கள் நேற்று அவருடைய அலுவலகத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

1990 இல் இருந்து நேற்று முன் தினம் வரை தமிழர்களை அழிப்பதிலும் சிறிலங்காப் புலனாய்வுத்துறையினருக்குத் துரும்புச் சீட்டாகப் பணியாற்றியவர் இந்த மோகன் எனத் தெரிவித்தார். கப்டன் முனாஸ் என்ற பெயரைச் சூட்டிக்கொண்ட இராணுவ அதிகாரியோடு இணைந்து இந்தப் புளொட் மோகன் என்பவர் நடத்திய படுகொலைகள், அழிவுகள் ஏராளம், கிழக்கு மாகாணத்தில் பல தமிழர் படுகொலைகளுக்கு இவர் முக்கியமானவர். இவரால் பாதிக் கப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழர் களுக்காக 1990 இல் இருந்து 2000 வரை சிறிலங்கா நீதிமன்றத்தில் ஆட் கொணர்வு மனு அளித்து வாதிட வன்என்ற வகையில் தமிழ் இளைஞர்கள், மக்களுக்கு எதிராய் இவர் நடத்திய கொடுமைகள், கொலை வெறிகள் பாதிக்கப்பட்ட இந்தத் தமிழர்களின் கண்ணீர் கதைகள் ஒரு வற்றாத கடல் என பாராளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான திரு. நடராஜா ரவி ராஜ் அவர்கள் தெரிவித்தார். (28)

# தீவகத்திற்குச் சென்ற கஜேந்திரனும் பத்மினியும் மக்கள் குறைகளைக் கேட்டறிந்தனர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றையதினம் தீவுப்பகுதி மக்களை சந்திப்பதற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராஜா. கஜேந்திரன், பத்மனி சிதம்பரநாதன் ஆகியோர் நேற்றுக்காலை 11 மணியளவில் ஊர்காவற்றுறை பெரியகுளம் தம்பாட்டி பகுதிக்கு சென்று அங்கு மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து கேட்டறிந்தனர்.

ஊர்காவற்றுறை பிரதேசசபை தமக்கு வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே குடிதண்ணீர் தருவதாகவும் இதனால் தாம் குடிதண்ணீர் பெறுவதில் பிரச்சினையை எதிர்கொள்வதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

பின்னர் நாரந்தனை பகுதிக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் சென்று அங்கு போரூட் நிறுவனத்தால் அமைக்கப்பட்டு வரும் ஒரு தனியறையை மட்டும் கொண்ட சிறிய வீடுகளின் கூரைகள் மக்களை குடியமர்த்துவதற்கு முன்னரே காற்றினால் தூக்கி வீசப்பட்டுக் கிடப்பதை பார்வையிட்டனர்.

வேலணை துறையூர் பகுதிக்குச் சென்றனர் அவர்களிடம் அங்கு முன்பள்ளிகள் இயங்குவதற்கான அடிப்படை வசதிகளான கட்டடங்கள் கூட அங்கு சரியான முறையில் இல்லை என அவ்வூர் மக்கள் எடுத்துக் கூறினர். (செ)

# சனாதிபதி காரியாலயத்தில் டொலர் நோட்டுக்கு அடிமையானோரின் பெயர்களை ஜே.வி.பி வெளியிட வேண்டும்

## -ஐ.தே.கட்சி கோரிக்கை

(கொழும்பு)

சனாதிபதி காரியாலயத்தில் டொலர் நோட்டுக்கு அடிமையானோரின் பெயர்ப்பட்டியலை ஜே.வி.பி வெளியிட வேண்டுமென ஐக்கிய தேசியக்கட்சி கோரியுள்ளது.

கடந்த புதன்கிழமை கேகாலையில் இடம் பெற்ற ஜே.வி.பி இன் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஜே.வி.பி இன் பிரச்சாரச் செயலர் விமல்வீரவன்ச சனாதிபதியின் காரியாலயத்தில் பலர் டொலர் நோட்டுக்கு அடிமையாகியுள்ளதாக கூறியிருந்தது குறித்தே ஐக்கிய தேசியக்கட்சி இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

# இரு சட்ட மூலங்களை எதிர்த்து ஆளும்-எதிர்க்கட்சி பா.உ.கள் பேரணி

(கொழும்பு)

சிறிலங்காவின் ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஒன்றிணைந்த சம்பவம் ஒன்று நேற்று இடம் பெற்றிருக்கிறது. பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்ட கட்டாய மதமாற்றத் தடைச்சட்டம் மற்றும் மதச்சுதந்திரத்தைப் பாதுகாக்கும் சட்ட மூலங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிலாபத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற எதிர்ப்பு ஊர்வலத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கட்டாய மதமாற்றத்தைத் தடுத்தல் மற்றும் சமய சுதந்திரத்தைப் பாதுகாத்தல் ஆகிய சட்டமூலங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிலாபத்தில் கத்தோலிக்கர்கள் நேற்றுக் காலை ஆரம்பித்த எதிர்ப்பு நடவடிக்கைகள் புத்தளம் பகுதியில் முடிவடைந்தது. அனைத்து தேவாலயங்களிலும் விஷேட திருப்பலிகள் ஒப்புக் கொடுக்கப்பட்டன.

இந்த எதிர்ப்பு நடவடிக்கையில் வென்னப்புவ சந்தியில் வைத்துப் பாராளுமன்ற கிறிஸ்தவ விவகார அமைச்சர் மிர்ட்றியோ, பெர்னாண்டோவும் இணைந்து கொண்டனர்.

இரண்டு இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து கொண்ட இவ் எதிர்ப்பு நிகழ்வில் புத்தளம் மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நிமல் பெரேராவும் கலந்து கொண்டிருந்தமை நோக்கத்தக்கது.

# ஷெல்காஸ் 70 ரூபாவால் உயர்வு

(கொழும்பு)

ஷெல்காஸ் சிலிண்டர் நேற்று முதல் 70 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஷெல்காஸ் சிலிண்டர் ஒன்று 690 ரூபாவாக உயர்ந்துள்ளது.

# அண்மைய தாக்குதல்களால் கொழும்பில் மக்கள் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலில்லை

## அமைச்சர் திலக் ரணவிராஜ

(கொழும்பு)

அண்மைக்காலத்தில் நடந்த தாக்குதல்கள் அனைத்தும் ஒரு சிலரை குறிவைத்து நடத்தப்பட்டுள்ளமையால் பொது மக்களின் பாதுகாப்பிற்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படவில்லை என மக்கள் பாதுகாப்பு சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சின் செயலாளர் திலக் ரணவீராஜ தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் கூறும் போது இத்தாக்குதல்களினால் கொழும்பு நகரில் வாழும் மக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நினைப்பது தவறு எனவும் தெரிவித்துள்ளார்.

# பௌத்தர்களை வறுமையிலிருந்து காப்பாற்றாமல் மதமாற்றத்தடைச் சட்டத்தால் பயனில்லை

## அஸ்கிரிய பீடாதிபதி

(கொழும்பு)

இந்த நாட்டில் மிக வறியநிலையில் வாழ்க்கை நடத்தும் பௌத்த மக்களை வறுமையிலிருந்து காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் மதமாற்றத்தடைச்சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவருவதில் எவ்வித பலனும் கிடையாது என அஸ்கிரிய பீடாதிபதி தெரிவித்துள்ளார்.வறுமையின் நிமித்தம் பௌத்தர்கள் வேறுமதத்திற்கு மாறுவதைத் தடுக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

# இடைக்கால நி. அமைப்பைப் பெறும் உரிமையை ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரிக்க வேண்டும்

## அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு மனு

சர்வதேச மனித உரிமைகளுக்கான சட்டங்கள் மற்றும் உடன்பாடுகளுக்கு அமைய தமிழ் மக்கள் தமது உரிமைகளை பிரயோகிக்கவும், தமக்கான இடைக்கால நிர்வாக அமைப்பொன்றை உருவாக்கவும் உரிமை கொண்டவர்கள் என்பதை ஐ.நா அங்கீகரிப்பதற்கான பரிந்துரையை ஐ.நா மனித உரிமைகள் உப ஆணைக்குழு செய்திட வேண்டும் என ஜெனீவாவைத் தலைமையகமாகக் கொண்ட அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு கோரியுள்ளது.

தற்போது ஆரம்பித்துள்ள ஐ.நா மனிதஉரிமைகள் பாதுகாப்புக்கும், மேம்பாட்டிற்குமான உப ஆணைக்குழுவின் 56ஆவது கூட்டத் தொடர் முன் இது தொடர்பான மனுவொன்று கையளிக்கப்பட்டுள்ளது. இம்மனுவில் தமிழ் மக்களின் இன்றைய வாழ்நிலை தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. குறிப்பாக தமிழ் மக்களிற்கு எதிரான பொருண்மிய சமூக மற்றும் பண்பாட்டு உரிமை மீறல்கள் விபரிக்கப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம், உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதார வாழ்வில் தமிழ் மக்கள் எதுவித முன்னேற்றங்களுமின்றி தொடர்ந்து துன்பங்களையும், புறக்கணிப்புக்களையும் அனுபவிப்பதை இம்மனு கோடிட்டு காட்டியுள்ளது. அத்துடன், இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினை மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் எவ்வாறு தமிழ் மக்களின் பொருண்மிய சமூக பண்பாட்டு உரிமைகளை மீறுகின்றது என்பனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தப் பின்னணியில் போரினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள், உலகளாவியபொருண்மிய சமூக பண்பாட்டு உரிமைகளிற்கான சாசனத்தின் கீழ் தமக்கான உரிமைகளைப் பேணுவதற்காக தம்மை தாமே ஆளும் நிர்வாக அமைப்பை உடனடியாகவே பெறுவதற்கான உரிமைகளைக் கொண்டவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள இம்மனு இன்றைய சூழலில் ஒரு இடைக்கால நிர்வாக அமைப்பைப் பெறுவதற்கான உரிமையைக் கொண்டவர்கள்எனக்குறிப்பிட்டுள்ளது. ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கீழ் செயற்படும் இவ் உப ஆணைக்குழு உடனடியாகவே இந்த வேண்டுதலைப் பரிசீலித்து இது தொடர்பான பரிந்துரையை ஐ.நாவிற்கு வழங்க வேண்டும் என உலகத்தமிழர் கூட்டமைப்பு கோரியுள்ளது. 1975இல் கையொப்பமிடப்பட்டு, 1997ல் சிறிலங்கா அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அனைத்துலக பொருண்மிய சமூக பண்பாட்டு உடன்படிக்கையின் முதலாவது பிரிவு, மக்கள் பொருண்மிய சமூகப் பண்பாட்டு மற்றும் கலாச்சார உரிமைகளைக் கொண்டவர்கள் என்பதையும் அதனை அவர்கள் பெறுவதற்கும், பிரயோகிப்பதற்கும் எதுவித தடையும் எவரும் விதிக்க முடியாது என்பதையும் இவ் ஆவணம் சுட்டிக்காட்டியுள்ளது.

# ஈராக்கில் நேற்று தொடர் குண்டு வெடிப்புக்கள் இருவர் பலி, 20 பேர் காயம், தேவாலயம் சேதம்

(பாக்தாத்)

ஈராக்கின் தலைநகரான பாக்தாத்தில் தொடர் குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. இதில் இருவர் கொல்லப்பட்டதுடன் இருபது பேர் காயமடைந்தனர். கிறிஸ்தவ தேவாலயங்கள் பல சேதமடைந்தன.

இந்தத் தொடர் குண்டு வெடிப்புக்களில் முதலாவது குண்டு பரடா என்ற கடைத் தொகுதியில் நடந்துள்ளது. இக் குண்டு வெடிப்பு நடைபெற்று பத்து நிமிடம் கழித்து இரண்டாவது குண்டு ஒரு கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றின் அருகே வெடித்தது.

அதே நேரம் வெளிநாட்டு ஊழியர்களும் ஒப்பந்தக் காரர்களும் தங்கும் சரத் என்ற விடுதிக்கு வெளியே இன்னுமொரு குண்டு வெடித்தது.இந்த மூன்று குண்டு வெடிப் புக்களாலும் பாக்தாத் அதிர்ந்து போயுள்ளதாக. தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வடக்கு-கிழக்கு மா.சபை தேர்தல் ஒகஸ்ட் 23 இல் நடத்த முடிவு

## -தேர்தல் திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

மூன்று தடவைகள் இடை நிறுத்தப்பட்ட வடகிழக்கு மாகாண சபை தேர்தல்கள் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என தேர்தல் திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர் தெரிவித்துள்ளதாக லக்பிம என்ற சிங்கள நாளிதழ் தெரிவித்துள்ளது.

இத்தேர்தல் மூலம் 690 மாகாண சபை அங்கத்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

-சமாதான முன்னெடுப்பு சம்பந்தமாக-

# சர். நிபுணர் குழுவின் ஆலோசனையை பெற சனாதிபதி சந்திரிகா முடிவு

(கொழும்பு)

இலங்கையின் சமாதான நடவடிக்கைகள் முன்னெடுப்பு சம்பந்தமாக சர்வதேச நிபுணர் குழுவின் ஆலோசனைகளை பெறுவதற்கு சனாதிபதி தீர்மானம் எடுத்துள்ளார்.

சனாதிபதி காரியாலயம் - சர்வதேச இணைப்பு சம்பந்தப்பட்ட குழு ஒன்று தற்பொழுது இலங்கை வந்துள்ளது. இக்குழுவினர் மனித உரிமைகள் மீறல், சமாதானச் செயற்பாடுகள் சம்பந்தமாக செயலாற்றுபவர் டேவிட் பொடோர்சன், எலக் கீனன், ஜோன் பெக்கர் ஆகியோர் பங்கேற்றுள்ளனர். இவர்கள் இலங்கையில் தங்கி இருக்கும் பொழுது எதிர்கட்சியினர் உள்ளிட்ட ஏனையகட்சியினர்களையும் சந்திக்க இருக்கின்றனர்.

# மீண்டும் அதிகரித்து வரும் இந்.இழுவைப் படகுகள், சிறிலங்கா கடற்படை ஒதுங்கிச் செல்கிறது

## வடமராட்சி மீனவ சங்கங்கள் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

மீண்டும் அதிகரித்து வரும் இந்திய மீன்பிடி இழுவைப் படகுகள் தொடர்பில் கடற்படையினர் திட்டமிட்டு ஒதுங்கிச் செயற்படுவதாக வடமராட்சி மீனவ சங்கங்கள் குற்றஞ்சாட்டுகின்றன.

கடந்த ஓரிரு தினங்களாக பருத்தித்துறை மற்றும் அதனை அண்டிய கடற்பகுதிகளில் நூற்றுக்கணக்கான இந்தியப் படகுகள் ஆக்கிரமித்து தொழிலில் ஈடுபடுவதாக அவ் வட்டாரங்கள் மேலும் குற்றஞ் சாட்டுகின்றன.

எனினும் இப்பகுதிகளில் ரோந்தில் தொடர்ச்சியாக ஈடுபடும் கடற்படைப் படகுகள் இவ்விடயத்தில் அக்கறையற்றிருப்பதாக தெரிவிக்கப் படுகின்றது.

நேற்றைய தினமும் பருத்தித்துறை பகுதியை சேர்ந்த மீனவர்களது பல இலட்ச ரூபா பெறுமதியான மீன்பிடி வலைகள் இந்திய மீன்பிடி இழுவைப் படகுகளால் வெட்டப் பட்டுள்ளன.

இதையடுத்து அப்பகுதி மீனவ சங்கப் பிரதிநிதிகள் சிலர் படகில் நேரடியாக சென்று இந்திய மீனவர்களுடன் பேச்சை நடத்தியுள்ளனர்.

ஆயினும் தாம் இக் கடற்பரப்பில் சங்கு மற்றும் நண்டுகளைப் பிடிப்பதில் மட்டுமே ஈடுபடுவதாக இந்திய மீனவர்கள் தெரிவித்ததாகவும், எனினும் அம் மீனவர்களை அங்கிருந்து வெளியேறுமாறு மீனவர் சங்கப் பிரதிநிதிகள் எச்சரித்து திரும்பியுள்ளதாகவும்கூறப்படுகிறது.

# சமாதானச் சூழலைப் பாதுகாக்க சிவில் சமூகத்தின் பங்களிப்பு அவசியம்

## கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்டத் தலைவர்

(திருகோணமலை)

தற்போதைய சமாதான சூழலைப்பேணிப்பாதுகாப்பதில் சிவில் சமூகம் பாரிய பங்களிப்பை வழங்க வேண்டியது அவசியமாகும் என்று இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருகோணமலை மாவட்டத்திற்கான தலைவர் டாக்பின்ஆட்னெஸ் திருகோணமலை நகர லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கு பற்றிப் பேசுகையில் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் சமாதானச் சூழலைப் பேணுவதில் சம்பந்தப்பட்ட தரத்தினரின் பங்களிப்பு போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குக் கிடைத்து வருவதாகவும் டாக்பின் ஆட்னெஸ் தெரிவித்தார். இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த 11 கண்காணிப்பாளர்களில் 5 பேர் தரையிலும் 6பேர் கடலிலும் கண்காணிப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். என்றும் அவர் தெரிவித்தார் (25)

# யாழ். போதனா மருத்துவமனையில் எயிட்ஸ் நோயாளி கண்டு பிடிப்பு

வயிற்றோட்ட நோயின் காரணமாக யாழ். போதனா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிக்கு எயிட்ஸ் (எச்.ஐ.வி) வைரஸ் தொற்றி உள்ளமை பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.மேற்படி நோயாளி முன்னர் வெளி நாட்டில் பணி புரிந்த சமயம் எச்.ஐ.வி கிருமி தொற்றி இருக்கலாமெனவும் நம்பப்படுகிறது.இதுவரை யாழ். மாவட்டத்தில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட எட்டுப் பேரில் நால்வர் மரணமடைந்ததாகவும் இவர்கள் அனைவரும் வெளிநாடுகளில் பணி புரிந்தவர்களெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கிளிநொச்சியில்....

வன்னி சட்டக் கல்லூரித் தலைவர் அச்சுதன், மனித உரிமைகள் ஆர்வலர் செல்வி. மாலதி (நியுசிலாந்து), செல்வி. டீட்ரே மிக்கொனல் (பரிஸ்- மனித உரிமைகள் தமிழ் நிலையம்), கிருபாகரன், பிரதீப் (சட்டத்தரணி-அவுஸ்திரேலியா), அண்ணா பரராஜசிங்கம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வண-பிதா கருணாரட்ணம் ஒவ்வொருவரையும் வரவேற்று கூட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றுகையில்.

"வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் சில வாரங்களுக்கு முன் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து வெளியிலிருந்து அநேக ஆதரவு கிடைத்துள்ளது. இச் செயலகத்திற்கு இதுவரை வடக்கு கிழக்கில் இருந்து 13 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் ஐந்திற்கு வெற்றிகரமாகத் தீர்வுகண்டுள்ளோம்" என்று தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் பிரதிநிதி ஒருவரும் செயலகப் பணிகளை அறிய வருகை தந்திருந்தார்.

தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்,நீதிநிர்வாகப் பொறுப்பாளர் பரா ஆகியோரை பிரத்தியேகமாகச் சந்தித்து செயலகத்திற்கு தாம் எவ்வாறு உதவலாம் என்டது குறித்து கலந்துரையாடியதாக வண-பிதா கருணாரட்ணம் தெரிவித்ததுடன் சிறைகளில் மனித உரிமைகள் செயலகம் விசாரணைகளை நடாத்துவதற்கு நடேசன் உதவி புரிவதாக வாக்களித்தார் என்றும் கூறினார்.

பின்னர் பத்திரம் விரிவாக ஆராயப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்வருவோர் செயலகத்தின் நிர்வாகக் குழுவாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: வண.பிதா-கருணாரட்ணம் உபதலைவர்: சிவபாலன் (வழக்கறிஞர்) செயலாளர்: செல்வி மாலதி பொருளாளர்: கஜேந்திரன்இறுதியாக பரிஸ்-மனித உரிமைகளுக்கான தமிழ் நிலையத்தைச் சேர்ந்த டீட்ரே மிக்கொனல் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் பத்திரங்களைக் கையளித்தார்.

## போராளிகளை....

போராளிகளின் பொதியை தாம் சோதனை செய்தே அனுப்புவதாகவும் கைதுசெய்யப்பட்ட இருவரும் தமது பொதியில் றவைகள் எவ்வாறு இருந்தன எனத் தெரியாது என அவர்களைப் பார்வையிடச் சென்ற போது தன்னிடம் தெரிவித்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். இந்த நிலையில் இந்த விடயம் குறித்து தமது தலைமைப்பீடத்துடன் தாம் ஆராய்ந்து வருவதாகவும் தெரிவித்த அவர் புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி சைனைட் குப்பிகள் வைத்திருப்பது தவறு அல்ல எனவும் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறு இருந்த போதும் இவ்வாறான நிலைமைகளின் போது யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுவினரின் முன்பே தமது போராளிகளை படையினர் சோதனையிட முடியும் என்ற ஒப்பந்த விதிமுறையையும் விசேட அதிரடிப்படையினர் மீறியுள்ளதாக குயிலின்பன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

இதேவேளை இவர்கள் அனைவரும் நேற்று அக்கரைப்பற்று நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டபோது இவர்கள் அனைவரையும் வரும் 13 ஆம்திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

-களுத்துறைச் சிறையில்-

# தமிழ் கைதிகளுக்கு நஞ்சூட்ட முயற்சி!

களுத்துறைச் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளின் உணவில் நஞ்சு கலக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று முந்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. எனினும் எவரும் குறிப்பிட்ட உணவை உட்கொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது. தமது உணவில் நஞ்சு கலக்கப்பட்டமைதொடர்பில்அரசியல்கைதிகள் சந்தேகம் வெளியிட்டமையை அடுத்து குறிப்பிட்ட உணவை பரிசோதித்த அதிகாரிகள் அதனை அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்துள்ளனர். இந்த நஞ்சுகலப்பைச் சிறையில் உள்ள கைதி ஒருவரே மேற்கொண்டதாகவும், அவரை சிறைச்சாலையில் தனித்து வைத்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் உண்மை விபரங்கள் எவற்றையும் சிறைத் தரப்புகளிடம் இருந்து பெறமுடியவில்லை. களுத்துறை பூஸா சிறையில் தற்சமயம் சுமார் 40 கைதிகள் வைக்கப்பட்டுள்ளனர்.

## இராணுவப்....

குணபண்டா சின்னவன் (வயது38)என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர்கள் மீதான விசாரணையை அடுத்து மேலும் சில தேசவிரோதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக மட்டு-அம்பாறைமாவட்ட விடுதலைப்புலிகளின் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## வல்லைப்...

ஏற்பாட்டை வல்வெட்டித்துறை மக்கள் மேற்கொண்டுள்ளனர்.

இப்பகுதியிலேயே குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட 12 வேங்கைகளதும், கேணல் கிட்டுவினதும் ஞாபகார்த்த தூபிகள் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. (27)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.